வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ———————— ஈழநாடு



## பாராளுமன்றத் தேர்தல் - 2024

தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து தமிழ் அரசு கட்சி வெளியேறிய பின்னர்
தமிழ் தேசியக் கூட்டமைப்பு இந்த பாராளுமன்ற தேர்தலில்
ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின்
சங்கு சின்னத்தில் போட்டியிடுகின்றது!

**தருமலிங்கம் சித்தார்த்தன்**
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)

X 5

யாழ். - கிளிநொச்சி மாவட்ட முதன்மை வேட்பாளர்

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 26.10.2024 சனிக்கிழமை | இதழ் : 299 | பக்கங்கள் : 12

# பாதுகாப்பு நடவடிக்கை நாடு முழுவதும் தீவிரம்!

கொழும்பு, ஒக்ரோபர் 26

**தாக்குதல் அச்சுறுத்தல்கள் காரணமாக நாடு முழுவதும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. நாடு முழுவதும் முக்கிய இடங்களில் பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் பாதுகாப்பு மற்றும் விசேட சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.**

சுற்றுலா பயணிகள் மீதான தாக்குதல் அச்சம் காரணமாக அம்பாறை மாவட்டத்தின் அறுகம் குடா, பொத்துவில் பகுதிகளில் பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. கடந்த 3 தினங்களாக இந்தப் பகுதிகளில்



பாதுகாப்பு நடவடிக்கைகள் உச்சளவில் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில், மற்றொரு சுற்றுலா தளமான தம்புள்ளையிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள்

11



## மன்னாரில் கனமழையால் 1,898 குடும்பங்கள் பாதிப்பு

மன்னார், ஒக். 26

மன்னாரில் தொடர்ந்து பெய்த கனமழையால் ஆயிரத்து 898 குடும்பங்களை சேர்ந்த 7 ஆயிரத்து 23 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் முதல் தொடர்ந்து பெய்த மழையால் மன்னார் பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 608 குடும்பங்களை சேர்ந்த 5 ஆயிரத்து 883 பேரும் நானாட் டான் பிரதேச செயலர் பிரிவில் 290 குடும்பங்களை சேர்ந்த ஆயிரத்து 390 பேரும்

11

## யாழ்ப்பாணம், கிழக்கை மையப்படுத்தி டிஜிற்றல் வலயங்கள் உருவாக்கப்படும்!

பிரதமர் ஹரிணி அமரசூரிய உறுதி

கொழும்பு, ஒக். 26

யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு மாகாணங்களை மையமாகக் கொண்டு டிஜிற்றல் வலயங்களை உருவாக்க அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

இலங்கை தகவல் தொழில்நுட்ப பட்டய நிறுவனத்தின் 26ஆவது ஆண்டு நிறைவில் பங்கேற்று பேசிய போதே அவர்

11



## அறுகம் குடா தாக்குதல் இலக்கு ஒரேயோர் இஸ்ரேலியர் மட்டுமே!

பொலிஸ் பேச்சாளர் விளக்கம்

- கைதான மூவருக்கும் மறியல்

கொழும்பு, ஒக். 26

அறுகம் குடா உட்பட நாட்டின் பல பகுதிகளில் தாக்குதல் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்ட தகவல் இஸ்ரேலிய பிரஜை ஒருவரை மட்டுமே இலக்கு வைத்து நடத்தப்படவிருந்த தாக்குதல் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இந்தத் தாக்குதலின் இலக்கு இஸ்ரேலியர்கள் அல்லாத வெளிநாட்டவர்களோ, இலங்கையர்களோ அல்லர். தற்போது, தாக்குதல் திட்டம் தொடர்பில் மூன்று இலங்கையர்கள்

11

## மழையால் யாழில் 60 பேர் பாதிப்பு!

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஒக். 26

கனமழை காரணமாக யாழ்ப்பாணத்தில் 15 குடும்பங்களை சேர்ந்த 60 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட அனர்த்த

11

## தமிழரின் வாக்கு வெளிப்பாட்டுக்கு எதிராக நாம் செயல்படமாட்டோம்!

கஜேந்திரகுமாருக்கு உறுதி அளித்தாராம் ஜூலி

யாழ்ப்பாணம், ஒக். 26

எதிர்வரும் பொதுத் தேர்தலில் அரசியல் தீர்வு குறித்து தமிழ் மக்கள் தமது வாக்குகள் மூலம் வெளிப்படுத்தும் நிலைப்பாட்டுக்கு புறம்பாக தாம் ஒருபோதும் செயல்படமாட்டோம் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திடம் உறுதியளித்தார் என்று கூறப்பட்டது.

வடக்குக்கு வந்த அமெரிக்கத் தூதுவர் நேற்று முன்தினம் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை சந்தித்துப் பேசியிருந்தார்.

இதன்போது, தமிழ் மக்கள் விடயத்தில் ஜனாதிபதி

11

## 12 நாட்களில் 2,058 பேருக்கு கண்புரை சத்திர சிகிச்சை!

யாழ்.போதனா மருத்துவமனை சாதனை!

யாழ்ப்பாணம், ஒக். 26

கடந்த 12 தினங்களில் மட்டும் 2 ஆயிரத்து 58 பேருக்கு கண்புரை (கற்றாக்) சத்திர சிகிச்சைகளை செய்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை சாதனை படைத்துள்ளது.

இதன்மூலம், வடக்கு மாகாணத்தில் கண்புரை சத்திர சிகிச்சைக்காக காத்திருப்பவர்களின் எண்ணிக்கை பூச்சியமாகியுள்ளதாக யாழ். போதனா மருத்துவமனையின் கண் பிரிவு தெரிவித்துள்ளது.

11

## சுவரொட்டி ஒட்டியவர் மின்சாரம் தாக்கி பலி!

முல்லைத்தீவு, ஒக். 26

தேர்தல் சுவரொட்டிகளை ஒட்டிய குடும்பஸ்தர் ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்.

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் - முத்துவிநாயகபுரம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இந்த சம்பவத்தில், அதே இடத்தைச் சேர்ந்த காசிலிங்கம் தங்கதீபன் (வயது 45) என்பவரே உயிரிழந்தார்.

யானைகள் நுழையாமல் தடுப்பதற்காக அமைக்கப்பட்ட மின்சார வேலியில் சிக்கியே குறித்த நபர் உயிரிழந்தார். இந்த மின்வேலி சட்டரீதியாக அமைக்கப்பட்டதா என்பது தெரிய வரவில்லை.

உயிரிழந்தவர் தமிழ்த் தேசிய மக்கள்

11

## அரிசியை ரூ.220இற்கு மேல் விற்றால் சட்ட நடவடிக்கை!

கொழும்பு, ஒக். 26

நாட்டு அரிசியை கிலோ 220 ரூபாய்க்கு அதிகமாக விற்பனை செய்வோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று வர்த்தக அமைச்சு அறிவித்துள்ளது.

கட்டுப்பாட்டு விலைக்கு அமைய அரிசி விற்பனை செய்யப்படுகிறதா என்பதை ஆய்வு செய்ய நுகர்வோர் அதிகார சபையினர் மாவட்ட அளவிலான சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அண்மையில், அரசி ஆலை உரிமையாளர்கள் ஜனாதிபதியுடன் நடத்திய கலந்துரையாடலில்

11

## கர்ப்பப்பை வாய் புற்றுநோயை தடுக்க மாணவியருக்கு தடுப்பூசி

சுகாதார அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஒக். 26

கர்ப்பப்பை வாய் புற்றுநோயை தடுக்கும் நோக்கில் 10 வயது பூர்த்தியடைந்த - தரம் 6இல் கல்வி கற்கும் சகல மாணவியருக்கும் தடுப்பூசி செலுத்தும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

நாட்டில் கர்ப்பப்பை வாய் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. வருடாந்தம் 800 முதல் ஆயிரம் பேர் வரையிலானவர்கள் கர்ப்பப்பை வாய் புற்றுநோயாளர்களாக

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

கவியரசர் கண்ணதாசன் எழுதிய குட்டிக் கதை ஒன்று இப்போது ஞாபகத்துக்கு வருகின்றது.

எமதர்மன் ஒருநாள் சித்ரகுப்தனிடம், "இனிமேல் சாகின்றவர்களின் நாக்கை மட்டும் தனியாக அறுத்துக் கொண்டு வந்துவிடு", என்று சொன்னான்.

அதுபோல் சித்ரகுப்தனும் நாக்குகளை மட்டும் அறுத்துக் கொண்டு வந்தான்.

அறுத்த பின்னாலும், சில நாக்குகள் துடித்துக்கொண்டு கிடந்தன. சில மரத்துப் போயும் சில இரு கூறாகப் பிளந்து போயும் இருந்தன.

"இவையெல்லாம் யாருடையவை?" என்று எமன் கேட்டான்.

"பிரபு! இரட்டையாகக் கிடக்கும் நாக்குகள் எல்லாம் ஆளும் கட்சிக்காரர்களுடையவை. துடித்துக்கொண்டிருக்கும் நாக்குகள் எல்லாம் எதிர்க்கட்சிக்காரர்களுடையவை" என்றான் சித்ரகுப்தன்.

"ஓர் உணர்ச்சியும் இல்லாத மற்ற நாக்குகள் .....?" என்று எமன் கேட்க,

"அவர்களுக்கு வாக்கு போட்ட மக்களுடையவை!" என்று அமைதியாகச் சொன்னான் சித்ரகுப்தன்.

கண்ணதாசன் இப்போது இலங்கையின் யாழ்ப்பாணத்தில் இருந்திருந்தால் - உணர்ச்சி இல்லாமல் கிடப்பவை ஈழத்து தமிழ் மக்களுடையவை என்று எழுதியிருப்பாரோ தெரியவில்லை. அத்தனை தூரம் நம்மவர்கள் உணர்ச்சியற்று இருக்கிறார்கள் என்றுதான் நினைக்க வேண்டியிருக்கின்றது. அதனால்தான் இப்போதும் சிலர் தாங்களே தமிழ் மக்களின் தலைவர்கள் என்றும் தமிழ் மக்களின் பிரச்னைகள் பற்றி தங்களுடன்தான் யாரும் பேசவேண்டும் எனவும் பேசிக் கொண்டிருக்கின்றார்கள்.

"நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட சமஷ்டி அரசமைப்பை இயற்றும் பணியை தொடர்ந்து முன்னெடுத்தல்.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் 2015ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானத்திலிருந்து இலங்கை விலகி இருந்தாலும் - அதனை மீள அமுல்படுத்துவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. அதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளதுடன் புதிய அரசில் வெளிவிவகார அமைச்சராக தமிழ் அரசு கட்சியின் மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன் நியமிக்கப்படவுள்ளார்".

இந்தத் தகவல்களை பிவித்திரு ஹெல உறுமயவின் தலைவரும் முன்னாள் எம். பியுமான உதய கம்மன்பில தெரிவித்திருக்கிறார்.

இந்தப் பத்தியில் எழுதுகின்ற அளவுக்கு கம்மன்பிலவின் செய்தி ஒன்றும் முக்கியமானது இல்லைத்தான். ஆனால், ஜனாதிபதி அநுர குமாரவை தமிழ் அரசு எம். பி. சந்தித்து பேச்சு நடத்தியதும், தமிழர் பிரச்னை என்றால் தம்முடன்தான் பேசவேண்டும் என்பதுபோல தமிழ் அரசு கட்சி இப்போதும் நினைத்துக் கொண்டிருப்பதும்தான் இந்தப் பத்தியில் இதனை எழுதுவதற்கு காரணமாகிவிட்டது.

இந்தத் தேர்தல் தமிழ் அரசு கட்சியின் தலையெழுத்தை தீர்மானிக்கப்போகின்ற தேர்தல் என்பது இரகசியமானது அல்ல. அந்தக் கட்சியிலிருந்து எத்தனை பேர் இந்தத் தடவை பாராளுமன்றம் போகப்போகின்றார்கள் என்பதும் இன்னமும் கேள்விக்குரியதாக இருந்துகொண்டிருக்கின்றது. இந்த நிலையில் எப்போதும்போல முந்திக்கொண்டு சுமந்திரன் ஜனாதிபதியைச் சந்தித்திருப்பதும் புதிய அரசியலமைப்பு பற்றி பேசியதாக ஊடகங்களுக்கு தெரிவித்திருப்பதும்தான் கம்மன்பிலவை பேச வைத்திருக்கின்றது.

அதிலும் வேடிக்கை என்னவென்றால், சமஷ்டி அரசமைப்பை முன்னெடுக்க அநுர இணங்கிவிட்டார் என்று கம்மன்பில பிதற்றுவது சிங்கள மக்கள் மத்தியில் எந்த உணர்வலையையும் ஏற்படுத்தப் போவதில்லை.

நல்லாட்சி அரசாங்கத்தில் தயாரிக்கப்பட்ட அரசியலமைப்பில் ஒற்றையாட்சி என்பதற்கு புதுச் சொல் கண்டுடிக்கப்பட்டதே தவிர, 'எக்க ராஜ்ய' என்பது ஒற்றையாட்சி அல்ல, அது ஒற்றையாட்சியைப் போல இருந்தாலும் சமஷ்டி பண்புகளைக் கொண்டதுதான் என்ற புதுவிளக்கத்துக்கும் வழிவகுத்ததே தவிர, அது சமஷ்டி அல்ல என்பதும் கம்மன்பிலவுக்கு தெரியாதது அல்ல. அதைவிட முக்கியமானது தமிழர்களின் தாயகமான வடக்கு - கிழக்கு இணைப்பு என்பதும் மறக்கப்பட்ட ஓர் அரசியலமைப்பு வரைவுதான் அது.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் தனது தேர்தல் விஞ்ஞாபனத்திலேயே, ஜனாதிபதி அநுர குமார இந்த விடயத்தை குறிப்பிட்டிருந்தார். பாராளுமன்றத்தை அரசமைப்பு பேரவையாக மாற்றி பல வருடங்களாக தயாரிக்கப்பட்ட அந்த அரசியலமைப்பு முயற்சியை தொடர்ந்து முன்னெடுக்கப்போவதாக அவர் தனது விஞ்ஞாபனத்தில் தெரிவித்திருந்தார். நடக்கவிருக்கும் பாராளுமன்றத் தேர்தலில் அவர்கள் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று, புதிய அரசாங்கத்தை அமைத்த பின்னரே அதுகுறித்து எதிர்வு கூறமுடியும் என்பது அனைவருக்கும் தெரிந்ததுதான்.

இந்த நிலையில் தேர்தல் காலத்தில் முந்திக்கொண்டு, தானே தமிழ் மக்களின் தலைவர் என்று காட்டுவதற்காகவும் அந்த முயற்சியை தொடரவேண்டுமெனில் அடுத்த பாராளுமன்றில் தான் இருக்கவேண்டும் என்று ஒரு செய்தியை தமிழ் மக்களுக்கு சொல்வதற்காகவுமே அவர் அவசரப்படுகின்றார் என்பதை புரிந்து கொள்ள முடியாதவர்கள் அல்லர் தமிழ் மக்கள்.

அநுர குமார சமஷ்டியை கொடுக்கப் போகிறார் என்று 'குய்யோ முறையோ' என்று கம்மன்பில குத்தி முறிந்தாலும், அப்படி ஜே. வி. பி. கொடுக்குமா என்பதைத் தெரியாதவர்கள் அல்லர் தென்னிலங்கை மக்கள். இவ்வாறு கோஷம் போட்டாலும் அடுத்த தேர்தலில் எப்படி கம்மன்பில வெற்றிபெறப் போவதில்லையோ, அதுபோலத்தான் அவர் மறைமுகமாக இன்னொருவருக்கு செய்யும் பிரசாரமும் தமிழ் மக்கள் மத்தியில் எடுபடப்போவதில்லை.

**- ஊர்க்குருவி.**

## காங்கேசன்துறை அஞ்சல் பணிமனையின் சேவை மீண்டும் சொந்த இடத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 26

காங்கேசன்துறை அஞ்சல் பணிமனை சுமார் 34 வருடங்களின் பின்னர் மீண்டும் காங்கேசன்துறையில் சேவையை ஆரம்பித்துள்ளது.

போர் காரணமாக 1990ஆம் ஆண்டு காங்கேசன்துறையிலிருந்த மக்கள் இடம் பெயர்ந்தனர். இதன்போது, காங்கேசன்துறை அஞ்சல் பணிமனையும் இடம் பெயர்ந்தது.

காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டமையை தொடர்ந்து அஞ்சல் அலுவலகம் தற்காலிகமாக மாவிட்டபுரத்தில் தற்காலிகமாக இயங்கி வந்தது.




இந்த நிலையிலேயே, காங்கேசன்துறை அஞ்சல் பணிமனையின் சேவை மீண்டும் காங்கேசன்துறை யிலிருந்து ஆரம்பமாகியுள்ளது. அதன் சொந்தக் காணியில் இருந்த கட்டடம் அழிவடைந்துள்ள நிலையில் தற்போது வாடகைக்கு பெறப்பட்ட கட்டடத்திலிருந்து அஞ்சல் பணிமனையின் சேவை மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.

(ஐ)

## ஓவிய கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக். 26

சுன்னாகம் பொது நூலகம் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்துள்ள பிரதேச ஓவியர் சி. சந்திரசுபநேமியின் கைவண்ணத்தில் உருவான ஓவியக் கண்காட்சி நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமானது.

இந்த ஓவியக் கண்காட்சி இன்று சனிக்கிழமையும் காலை - 09 மணி தொடக்கம் மாலை - 05 மணி வரை சுன்னாகம் பொதுநூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(ஐ)

## மாகாண மட்ட சித்திர போட்டி முல்லை. மாணவிக்கு தங்கம்!

முல்லைத்தீவு, ஒக். 26



வடக்கு மாகாண அளவிலான சித்திரம் வரைதல் போட்டியில் முல்லைத்தீவு - குமுழமுனை மகா வித்தியாலய மாணவி மயூரன் ஆருதி தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.

மாகாண மட்ட ஆரம்ப பிரிவுக்கான சித்திரம் வரைதல் போட்டி நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலையில் நடைபெற்றது. இந்தப் போட்டியிலேயே ம. ஆருதி முதலிடத்தை பெற்றார்.

இந்த மாணவியை ஆசிரியை திருமதி ஜெயசீலன் விமலாதேவி நெறிப்படுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
26.10.2024 சனிக்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 09
"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.
E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அமெரிக்க தூதுவர் கஜேந்திரகுமாரிடம் ஆவலுடன் கேட்ட கேள்வி

வடக்குக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திர குமார் பொன்னம்பலத்தையும் கட்சியின் செயலாளர் செல்வராஜா கஜேந் திரனையும் யாழ்ப்பாணத்தில் தனியார் ஹோட்டல் ஒன்றில் சந்தித்துப் பேசியபோது தமிழ் அரசியல் கட்சிகள் எல்லாம் வெட்கித் தலைகுனிய வேண்டிய கேள்விகளை கேட்டாரென செய்திகள் வெளியாகியிருக் கின்றன.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பாக செயல்பட்ட தமிழ்க் கட்சிகள் ஏன் பிரிந்து நிற்கின்றன? இந்தக் கட்சிகளால் ஒற்றுமையாக செயல்பட முடியாதா? அதற்கான சாத்தியங்கள் இருக்கின்றனவா? இவையே அமெரிக்கத் தூதுவர் எழுப்பிய கேள்விகள்.

அவற்றுக்குப் பதிலளித்த பொன்னம்பலம் தங்களைப் பொறுத்தவரை, ஒற்றையாட்சி மற்றும் அரசமைப்பின் 13ஆவது திருத்தம் போன்ற விடயங்கள் தொடர்பாக ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாகவே கூட்ட மைப்பில் இருந்து வெளியேறவேண்டி வந்தது என்றும் அந்த நிலைப் பாட்டில் தாங்கள் தொடர்ந்தும் இருந்து வருகின்றனர் எனவும் கூறியி ருக்கிறார். மற்றைய தமிழ்க் கட்சிகள் பிரிந்து நிற்பதற்கான காரணம் தங்களுக்கு விளங்கவில்லை என்றும் குறிப்பிட்ட அவர், கொள்கைய ளவில் அந்தத் தமிழ்க் கட்சிகளுக்கு இடையில் வேறுபாடுகள் இல்லை என்பதால் அவர்களுக்கு இருக்கக்கூடிய பிரச்னைகளை அவர்களிடமே கேட்டறிய வேண்டும் என்று அமெரிக்கத் தூதுவரிடம் கூறிவைத்தாரென அந்த செய்திகள் மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது.

பொன்னம்பலம் அளித்த பதில் அவரின் முன்னணி மற்றைய தமிழ்க் கட்சிகளுடன் இணைந்து செயல்படுவதற்கான சாத்தியம் ஒருபோதும் தோன்றப்போவதில்லை என்பதை உறுதிப்படுத்துவதாக அமைந்தது. இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா முதற்தடவையாக தமிழ்க் கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்தபோது தமிழ் மக்களின் பிரச்னை களுக்கான தீர்வு தொடர்பில் ஒன்றுபட்ட நிலைப்பாட்டை எடுக்குமாறு கேட்டுக்கொண்ட வேளையிலும் பொன்னம்பலம் மற்றைய தமிழ்க் கட்சிகளுடன் அத்தகைய ஒன்றுபட்ட நிலைப்பாட்டுக்கு வருவதில் உள்ள சிக்கல்களை நேரடியாகவே கூறியிருந்தார்.

அவருடைய நிலைப்பாடுகள் குறித்து பல்வேறு விமர்சனங்கள் இருப்பது வேறு விடயம். ஆனால், அவர் மற்றைய தமிழ்க் கட்சிகளுடன் இணைந்து செயல்படுவதற்கு சாத்தியமில்லை என்பதிலும் தேசிய இனப்பிரச்னைக்கான தீர்வு தொடர்பான நிலைப்பாட்டில் சமரசத்துக்கு இடமில்லை என்பதிலும் உறுதியாக இருக்கிறார். அத்தகைய ஒரு பிடிவாதமான நிலைப்பாட்டின் மூலமாக தாங்கள் இதுவரையில் சாதித்தது என்ன என்பதை தமிழ் மக்களுக்கு கூறினால் நல்லது.

கொள்கைகளைப் பொறுத்தவரை எந்த வேறுபாடும் இல்லாத மற்றைய தமிழ் கட்சிகள் பிரிந்து நிற்பதற்கான காரணங்களை அந்தக் கட்சிகளின் தலைவர்களிடமே கேட்கவேண்டும் என்று பொன்னம்பலம் கூறியதைக் கேட்ட ஜூலி சங் அந்த தலைவர்களைச் சந்தித்தாரென இந்த ஆசிரிய தலையங்கத்தை எழுதிய தருணம் வரை தகவல் இல்லை. அவர் இலங்கையில் தனது பதவிக்காலத்தை முடித்துக்கொண்டு விரைவில் அமெரிக்கா திரும்பவிருப்பதால் தமிழ்க் கட்சிகள் பிரிந்து நிற்பதற்கான உண்மையான காரணங்களை அறியாமலேயே போய் விடவும் கூடும்.

இறுதியாக, பாராளுமன்றத் தேர்தலில் அரசியல் தீர்வு குறித்து தமிழ் மக்கள் தங்கள் வாக்குகள் மூலம் வெளிப்படுத்தும் நிலைப்பாட்டுக்குப் புறம்பாக அமெரிக்கா ஒருபோதும் செயல்படாது என்றும் பொன்னம் பலத்திடம் ஜூலி சங் கூறியிருக்கிறார். உலகின் மிகப்பெரிய வல்லரசான அமெரிக்காவே புறம்பாகச் செயல்பட முடியாததாக அப்படி வடக்கு, கிழக்கு தமிழ் வாக்காளர்கள் வெளிப்படுத்தக்கூடிய நிலைப்பாட்டின் இலட்சணத்தை பார்ப்பதற்கு ஓர் இருபது நாட்கள்தானே - அமைதியாகப் பொறுத்திருப்போம்.

# வலி. மேற்கு பிரதேச செயலகத்தின் பண்பாட்டு பெருவிழா சிறப்புற நடந்தது!





யாழ்ப்பாணம், ஒக். 26

வலிகாமம் மேற்கு பிர தேச செயலகம், வடக்கு மாகாண பண்பாட்டு அலு வல்கள் திணைக்களம் ஆகி யன இணைந்து நடத்திய பண்பாட்டு பெருவிழா சிறப் புற நடந்தது.

சங்கானை கலாசார மத் திய நிலையத்தில் நேற்று முன்தினம் நடந்த இந்த நிகழ் வில் விருந்தினர்கள் சங் கானை பேருந்து நிலையத் திலிருந்து விருந்தினர்கள் பாரம்பரிய பொம்மலாட் டம், குதிரையாட்டம், இன்னியம் ஆகியவற்றின் அணிவகுப்புடன் விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

தொடர்ந்து, மங்கல விளக்கு ஏற்றி வைக்கப்பட்டு, நாடாவெட்டி வைக்கப்பட்டு மேடைநிகழ்ச்சிகள் ஆரம்ப மாகின. கலை நிகழ்வுகள், கலைஞர்களுக்கான கௌர விப்புகள், விருந்தினர்களின் உரைகள் என்பன வெகு சிறப்பாக நடைபெற்றன.

வலிகாமம் மேற்கு பிர தேச செயலர் திருமதி கவிதா உதயகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த பண் பாட்டுப் பெருவிழாவில் பிர தம அதிதியாக யாழ்ப்பா ணம் மாவட்ட பதில அர சாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் பங்கேற்றார். இந்த நிகழ்வில், உத்தியோகத் தர்கள், கலைஞர்கள், பொது மக்கள் எனப் பலர் பங்கேற்ற னர். (ஐ-05)

# யாழில் எலிக்காய்ச்சலால் இளம் குடும்பஸ்தர் மரணம்

யாழ்ப்பாணம், ஒக். 26

யாழ்ப்பாணத்தில் எலிக் காய்ச்சல் காரணமாக இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரி ழந்தார். வட்டுக்கோட்டை சங்கரத்தை பகுதியைச் சேர்ந்த சிறீ. சிவாஸ்கர் (வயது - 34) என்பவரே உயிரிழந்தார்.

இவருக்கு கடந்த 21ஆம் திகதி திடீரென காய்ச்சல் ஏற்பட்ட நிலையில் 22ஆம் திகதி சங்கானை மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். இதன் பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்ப்பா ணம் போதனா மருத்துவம னைக்கு மாற்றப்பட்டார்.

யாழ். போதனா மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்த அவர் சிகிச்சை பல னின்றி நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதி காரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். எலிக் காய்ச்சல் காரணமாகவே இவர் இறந்தார் என்று உடற் கூற்று பரிசோதனையில் தெரியவந்தது. (எ-05)

# மடு விபத்தில் ஒருவர் படுகாயம்!

மன்னார், ஒக். 26

மடு - பிரமணாலங்குளத் தில் நடைபெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

இந்த விபத்தில், வவு னியா செட்டிக்குளம் - மெனிக்பாமை சேர்ந்த பாண் வியாபாரியே படுகாய மடைந்தார்.

வீதியில் நிறுத்தப்பட்டி ருந்த வாகனத்துடன் மோதி நேற்று முன்தினம் இந்த விபத்து இடம்பெற்றது.

படுகாயமடைந்தவர் பூவ ரசங்குளம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ)

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நேற்று போராட்டம்!



கிளிநொச்சி, ஒக். 26

காணாமல் ஆக்கப்பட் டோரின் உறவினர்கள் நேற்று வெள் ளிக்கிழமை கிளிநொச் சியில் கவனவீர்ப்பு போராட் டத்தை முன்னெடுத்திருந்த னர்.

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தின் முன்றலில் முற் பகல் 10 மணியளவில் இந்தப் போராட்டம் நடைபெற்றது.

காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகளுக்கு நீதி வேண்டி குறித்த கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப் பட்டது. இதன்போது, காணாமல் ஆக்கப்பட்ட வர்களின் உறவினர்கள் தமது பிள்ளைகள் மற்றும் உறவுக ளின் படங்களையும் நீதி கோரிய வாசகங்கள் அடங் கிய பதாகைகளையும் ஏந்தி யிருந்தனர். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
நீண்ட நாட்களாக பார்க்க நினைத்த ஒருவரை சந்திப்பீர்கள். பழைய கடனைப் பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள். திருப்தி உண்டாகும். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள்.

**இடபம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். சொந்த-பந்தங்கள் தேடி வருவார்கள். சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும்.

**மிதுனம்**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். புதிய பாதை தெரியும் நாள்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியவில்லையே என்று ஆதங்கப்படுவீர்கள். மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்காதீர்கள்.

**சிம்மம்**
குடும்பத்தினரை அனுசரித்துப் போங்கள். வெளி வட்டாரத்தில் யாரையும் விமர்சிக்க வேண்டாம். உறவினர்கள், மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**கன்னி**
குடும்பத்தினருடன் மனம்விட்டுப் பேசுவீர்கள். மனதிற்கு இதமான செய்தி வரும். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள்.

**துலாம்**
எதையும் சாதிக்கும் தன்னம்பிக்கை பிறக்கும். பழைய உறவினர், வியாபாரத்தில் சூட்சுமங்களை உணர்வீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்கள் ஆலோசனையை ஏற்பார்கள்.

**விருட்சிகம்**
குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மனநிறைவு கிட்டும் நாள்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில வேலைகளை உங்கள் பார்வையிலேயே முடிப்பது நல்லது. வியாபாரத்தில் பணியாட்களால் டென்ஷன் ஏற்படும். உங்களைப் பற்றி வதந்திகள் வரும்.

**மகரம்**
சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும்.

**கும்பம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர், நண்பர்களால் ஆதாயமடைவீர்கள். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார்.

**மீனம்**
குடும்பத்தில் உங்கள் கைஓங்கும். ஆடம்பரச் செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் ரசனையைப் புரிந்துகொள்வீர்கள். புதுமை படைக்கும் நாள்.

# கிளிநொச்சியில் டெங்கு நோய் ஒழிப்பு நடவடிக்கை



கிளிநொச்சி, ஒக். 26

டெங்கு நோயை பரப்பும் நுளம்புகள் பெருகும் சூழலை இனங்கண்டு அழிக்கும் செயல்பாடுகள் கிளிநொச்சியில் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்ட தொற்று நோய் பிரிவினரின் ஏற்பாட்டில் பரந்தன் பகுதியில் மாவட்ட தொற்று நோய் தடுப்புப் பிரிவு மருத்துவர் க. றஞ்சன் தலைமையில் பொதுச்சுகாதார பரிசோதகர்கள், தொற்றுநோய் பிரிவின் சுகாதார உத்தியோகத்தர்கள் எனப் பலரும் இதில் கலந்து கொண்டனர். (எ-05)

# தபால் மூல வாக்களிப்பு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுடன் யாழில் கலந்துரையாடல்





யாழ்ப்பாணம், ஒக். 26

பாராளுமன்றத் தேர்தலில் தபால் மூல வாக்களிப்பு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுடனான கலந்துரையாடல் யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் யாழ்ப்பாணம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன் போது தலைமையுரையாற்றிய தெரிவத்தாட்சி அலுவலர், நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலானது நீதியாகவும் சுமுகமாகவும் நடைபெற்றதாகவும் அதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் தமது நன்றியினைத் தெரிவித்துக்கொண்டதுடன், தபால் மூல வாக்களிப்பானது, மாவட்டச் செயலகம், பொலிஸ் மற்றும் மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் ஆகியவற்றில் கடமையாற்றுபவர்களுக்கு எதிர்வரும் 30 ஆம் திகதியும் மற்றும் நவம்பர் மாதம் 04 ஆம் திகதியும் நடைபெறவுள்ளதாகவும், படையினர் மற்றும் பிற அரச நிறுவனங்களில் கடமையாற்றுபவர்களுக்கு எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதியும் மற்றும் 04 ஆம் திகதியும் நடைபெறவுள்ளதாகவும், மேற்குறித்த திகதிகளில் வாக்களிக்கத் தவறியவர்கள் மீள வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் மாவட்டச் செயலகத்தில் எதிர்வரும் நவம்பர் மாதம் 07 ஆம் திகதியும் மற்றும் 08 ஆம் திகதியும் நடைபெறவுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும், தபால் மூல வாக்களிப்புக் கடமைக்காக நியமிக்கப்பட்ட அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்கள் தபால் மூல வாக்களிப்பை ஒவ்வொரு வாக்களிப்பு நிலையங்கள் போலவே செயல்பட்டு, இட ஒழுங்கமைப்பு, முகவர்களுக்குரிய ஏற்பாடுகள் போன்றவற்றை முறையாக நடைமுறைப்படுத்தி ஒத்துழைப்பு நல்குமாறு தெரிவத்தாட்சி அலுவலர் கேட்டுக்கொண்டார்.

இதன்போது, பாராளுமன்றத் தேர்தலில் தபால் மூல அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பில் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் இ. கி. அமல்ராஜ் விளக்கமளித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் திணைக்களத் தலைவர்கள், திணைக்களத் தலைவர்களால் நியமிக்கப்பட்ட சிரேஷ்ட அலுவலர்கள் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்கள் கலந்து கொண்டனர். (எ-05)

# மொழிபெயர்ப்பு நூல் கையளிப்பு




யாழ்ப்பாணம், ஒக். 26

அண்மையில் இலங்கை வந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கரால் கையளிக்கப்பட்ட நூல் ஒன்று யாழ். இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளியால் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனிடம் கையளிக்கப்பட்டது.

“ஒரு சிறந்த நாளைக்கான பிணைப்புகளை வலுப்படுத்துதல்” என்னும் ஹிந்தி மொழியில் உருவாக்கப்பட்ட நூல், தமிழில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு, கையளிக்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் - மருதடி வீதியில் உள்ள இந்தியத் துணைத் தூதர அலுவலகத்தில் துணைத் தூதுவர் சாய் முரளி தலைமையில் நடைபெற்றது.

மொழி பெயர்ப்பு செய்யப்பட்ட இந்த நூலினை வடமாகாண ஆளுநர் வேதநாயகன், இந்தியத் துணைத்தூதர் சாய் முரளியிடம் இருந்து பெற்றுக் கொண்டார். (எ-05)

# மனித உரிமைகள் மீறல் தொடர்பில் கிளிநொச்சியில் கலந்துரையாடல்

## யாழ். பிராந்திய அலுவலகம் ஏற்பாடு

கிளிநொச்சி, ஒக். 26

சிறுவர் துஷ்பிரயோகங்கள், கல்வி, சுகாதார விடயங்களில் இடம்பெறுகின்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் கிளிநொச்சியில் ஆராயப்பட்டன.

கிளிநொச்சி மாவட்ட சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளிடம் கருத்துகளை கேட்கும் கலந்துரையாடல் நேற்று நடைபெற்றது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜின் ஏற்பாட்டில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர்களான கலாநிதி கெஹான் குணதிலக, பேராசிரியர் பாத்திமா பர்ஹானா ஹனிபா ஆகியோரின் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெறும் மனித உரிமை மீறல் பிரச்னைகள் தொடர்பில் ஆராயப்பட்டதுடன், மாவட்டத்தில் இடம்பெறுகின்ற சட்டவிரோத செயல்பாடுகள், சிறுவர் துஷ்பிரயோகங்கள், கல்வி மற்றும் சுகாதாரம் போன்ற விடயங்களில் இடம்பெறுகின்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத அச்சுறுத்தலை இலங்கை நிவர்த்தி செய்யும்!

## பிரித்தானிய தூதுவர் நம்பிக்கை

கொழும்பு, ஒக். 26

**இலங்கையில் உள்ள பிரித்தானிய தூதரகம் இலங்கை அதிகாரிகள் விரைவில் பயங்கரவாத அச்சுறுத்தலை நிவர்த்தி செய்வார்கள் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளது.**

அதேநேரம், இலங்கை அரசாங்கத்திற்கு அதன் ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்தியது.

இந்தத் தகவலை இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் அன்ட்ரூ பேட்ரிக் ஆங்கிலச் செய்திச் சேவை ஒன்றிடம் தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய வெளிவிவகார அலுவலகம், தாக்குதல் அச்சுறுத்தல் தீர்க்கப்பட்டவுடன் இலங்கைக்கான தனது பயண ஆலோசனையை மறுபரிசீலனை செய்யும்.

எனினும், பயண ஆலோசனை முழுமையாக நீக்கப்படுமா அல்லது ஓரளவு நீக்கப்படுமா என்பது தெளிவாக தெரியவில்லை.

பிரித்தானிய சுற்றுலாப் பயணிகளிடையே பிரபலமான பல நாடுகளில் சாத்தியமான பயங்கரவாத தாக்குதல்களுக்கு எதிராக எச்சரிக்கும் பயண ஆலோசனைகள் பொதுவானவை.

ஸ்பெயின் மற்றும் தாய்லாந்து உட்பட, சாத்தியமான பயங்கரவாத தாக்குதல்கள் குறித்து பல நாடுகளில் இது போன்ற எச்சரிக்கைகள் உள்ளதாகவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

2022 ஆம் ஆண்டின் பொருளாதார நெருக்கடி மற்றும் சமூக அமைதியின்மையைத் தொடர்ந்து, இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் வரை இலங்கைக்கான பயண ஆலோசனையை பிரித்தானிய கடைப்பிடித்தது.

(அ)

# திருடர்களை கைது செய்யும் செயல்பாடு தொடரவேண்டும்

## ஜனாதிபதியிடம் கோருகிறார் ரஞ்சன்

கொழும்பு, ஒக். 26

"கள்வர்களையும் மோசடியாளர்களையும் கைது செய்யும் செயற்பாட்டை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டும்" என்று ஐக்கிய ஜனநாயகக் குரல் கட்சியின் தலைவர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, உறுதியளித்ததைப் போன்றே திருடர்களை தற்போது பிடிக்க ஆரம்பித்து விட்டார்.

இன்று பலர் உள்ளே சென்றுவிட்டார்கள். இந்த செயல்பாட்டை அவர் தொடர்ந்து செய்யவேண்டும் என்பதுதான் எமது நிலைப்பாடு.

நானும் திருடர்களைப் பிடிக்கத்தான் கடந்த காலங்களில் போராடினேன். எனினும், இறுதியில் நான்தான் சிறைக்கே சென்றேன். நான் ரெக்கோடிங்களுக்கு பயந்தவன் கிடையாது. எனது ஒரு ரெக்கோடிங்கில்கூட, நான் லஞ்சம், கப்பம் கோரியதாகவோ, சிறையில் இருக்கும் திருடர்களையோ கொலைக் காரர்களையோ வெளியியே விட வேண்டும் என்று நான் கூறவில்லை.

மாறாக, திருடர்களை பிடிப்போம், அவர்களை பிணையில் விடுவிக்கக்கூடாது என்றே நான் பேசியிருப்பேன். என்னிடம் ஒழிவு மறைவுக் கிடையாது. நேர்மையாக இருந்தால் எதற்காக அஞ்ச வேண்டும்-என்றார்.

(அ)

# பலமான எதிர்க்கட்சியாக நாம் செயல்படுவோம்!

## கூறுகிறார் எஸ்.எம். சந்திரசேன

கொழும்பு, ஒக். 26

"பொதுத்தேர்தல் ஊடாக பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை பெறுவதற்கு முயற்சிக்கின்றோம். அவ்வாறு இல்லாவிட்டால் பலமான எதிர்க்கட்சியாக செயற்படுவோம்." என்று சிலிண்டர் கூட்டணியின் சிரேஷ்ட உறுப்பினரான முன்னாள் அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு-

எமது கூட்டணியில் ரணில் விக்கிரமசிங்க, தினேஷ் குணவர்தன, நிமல் சிறிபாலடி சில்வா போன்ற சிரேஷ்ட தலைவர்கள் உள்ளனர். அவர்கள் கூட்டணியை வெற்றிகரமாக வழிநடத்துவார்கள். சிறந்த மாவட்ட தலைவர்களும் உள்ளனர்.

எனவே, பொதுத்தேர்தலில் ஊடாக ஆட்சியமைக்க முயற்சித்துவருகின்றோம். அதற்குரிய ஆணை கிடைக்காவிட்டால் பிரதான எதிர்க்கட்சியாக செயல்படுவோம். அதற்குரிய ஆணையை மக்கள் எமக்கே வழங்குவார்கள் என்ற உறுதியான நம்பிக்கை உள்ளது.

அநுராதபுரம் மாவட்டத்தில் நான்கு தடவைகள் விருப்பு வாக்கு பட்டியலில் நானே முதலிடம் பிடித்தேன். 2015 இல் கூட மைத்திரியால் அநுராதபுரம் மாவட்டத்தை வெல்ல முடியாமல்போனது. இம்முறையும் நாமே வெல்வோம்-என்றார்.

# இலங்கையிலுள்ள இஸ்ரேலியர்களின் செயல்பாடு குறித்து ஆராயவேண்டும்!

## முஜிபுர் ரஹ்மான் கோரிக்கை

கொழும்பு, ஒக். 26

நாட்டில் உள்ள இஸ்ரேலியர்களின் செயல்பாடுகள் குறித்து அரசாங்கம் ஆராய வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பபினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் கூட்டணியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அறுகம்குடா பகுதியில் இஸ்ரேலியர்களை இலக்குவைத்து தாக்குதல் நடத்தப்படலாம் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. இந்த விடயத்தை சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது. இதேவேளை இதன் மறுபுறம் பற்றியும் சிந்திக்க வேண்டும்.

மத்திய கிழக்கு நாடுகளில் போர்ச் சூழல் நிலவுகிறது. நாம் ஏற்கனவே பலஸ்தீனத்துக்கு ஆதரவான நிலைப்பாட்டில் நாம் இருக்கிறோம். ஆதலால் இஸ்ரேலியர்கள் குறித்தும் அவதானமாக இருக்கவேண்டும். உலகின் சக்திவாய்ந்த அணுவாயுதங்களை கொண்ட நாடுகளில் ஒன்றாக இஸ்ரேல் விளங்குகிறது.

இஸ்ரேலியர்கள் பலர் நாட்டில் பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். கொழும்பில் கூட மிகவும் பாதுகாப்பாக அவர்களுக்கான கட்டடங்கள் அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஆதலால் இந்த விடயம் குறித்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு ஏற்புடைய வகையில் அரசாங்கத்தின் செயல்பாடுகள் அமையவேண்டும்-என்றார்.

(அ)

# கண்டியில் பலத்த பாதுகாப்பு

கொழும்பு, ஒக். 26

கண்டியில் இஸ்ரேலியர்கள் தங்கியுள்ள சுற்றுலா விடுதிகளுக்கு விசேட பாதுகாப்பை வழங்க பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதற்கமைய, கண்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுற்றுலா ஹோட்டல்களுக்கு வருகை தரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் தொடர்பிலான தினசரி அறிக்கைகளை பெற்றுக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அவற்றில் இஸ்ரேலியர்கள் தங்கும் சுற்றுலா விடுதிகளுக்கு விசேட பாதுகாப்பை வழங்க பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கண்டி பிரதேசத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அனுருத்த பண்டாரநாயக்கவின் பணிப்புரைக்கமைய இந்த பாதுகாப்பு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த பாதுகாப்பு வேலைத்திட்டத்தின் கீழ் சுற்றுலா விடுதிகள் தொடர்பில் விசேட ரோந்து



வேலைத்திட்டமும் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையிலுள்ள இஸ்ரேலியர்களை இலக்குவைத்து தாக்குதல்கள் மேற்கொள்ளப்படலாம் என்ற அச்சுறுத்தல் காணப்படுவதாக இலங்கைக்கான அமெரிக்கத்தூதரகம் பிரஜைகளுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தது.

அறுகம்குடா மற்றும் பொத்துவில் பிரதேசங்களில் இஸ்ரேலியர்கள் அதிகமாக அலைச்சறுக்கு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் எனவும், எனவே அவர்களுக்கு ஆபத்து நேரிடலாம் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

(அ)

# துப்பாக்கி தயாரித்த இடம் சுற்றிவளைப்பு

கொழும்பு, ஒக். 26

மாத்தறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாலட்டுவ பிரதேசத்தில் ரிவோல்வர் ரக துப்பாக்கிகள் தயாரிக்கப்படும் இடம் ஒன்று நேற்று முன்தினம் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

மாத்தறை குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய இந்த சுற்றிவளைப்பு இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் தலைமைகத்தினால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்போது உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ஒரு துப்பாக்கி, 9 மில்லி மீற்றர் 05 ரவைகள், 01 வெல்டிங் இயந்திரம் மற்றும் உபகரணங்களுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 63 வயதுடைய பாலட்டுவ, மாலிம்பட பிரதேசத்தைச் சேர்ந்தவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது இவ்வாறு தயாரிக்கப்பட்ட 02 துப்பாக்கிகள் பணத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து அஹங்கம பொலிஸ் பிரிவில் விற்பனை செய்யப்பட்ட 02 துப்பாக்கிகளுடன் இரண்டு சந்தேகநபர்களை மாத்தறை குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் அஹங்கம பிரதேசத்தை சேர்ந்த 47 மற்றும் 54 வயதுடையவர்களாவர். சந்தேகநபர்கள் மற்றும் கைப்பற்றப்பட்ட பொருட்கள் மாத்தறை பொலிஸ் நிலையத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், மாத்தறை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள - பௌத்த மனோநிலையையே அநுர அரசாங்கமும் பின்பற்றுகின்றது

## சிறிதரன் குற்றச்சாட்டு



கிளிநொச்சி, ஒக். 26

**மாற்றத்தை விரும்பிய மக்களின் ஆணையால் இலங்கைத் தீவில் ஆட்சி மாறியிருக்கிறதே தவிர, அதிகாரபீடங்களின் செயல்நோக்கும், மனோநிலையும் சிங்கள வல்லாதிக்கத்தின் வெளிப்பாடாகவே இன்றும் தொடர்கிறது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றப் பொதுத் தேர்தலுக்கான பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் சிறிதரன் நேற்று முன்தினம் கிளிநொச்சி - கண்ணகிநகர் கிராமத்தில் தமது ஆதரவாளர்களை சந்தித்து கலந்துரையாடும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

காலம்காலமாக இந்த நாட்டின் அதிகார பீடங்களும், கொள்கைவகுப்பாளர்களும் எத்தகையதோர் ஆதிக்க மனோநிலையுள் சிக்குண்டிருந்தார்களோ, அதே மனோநிலையில்தான் அநுர அரசின் நடவடிக்கைகளும் அமைந்திருக்கின்றன.

இன்றையதினம் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்ட யாழ்.தேர்தல் மாவட்ட வேட்பாளர்களான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் யாழ்.மாநகரசபையின் முன்னாள் உறுப்பினர் வரதராஜன் பார்த்தீபன் ஆகியோர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளமை கண்டனத்துக்குரியதாகும்.

அதேபோல், இலங்கையின் அரசகரும மொழியாக அங்கீகரிக்கப்பட்ட தமிழ்மொழி இதுவரை காலமும் அரச ஆவணங்களில் இரண்டாம் மொழியாக பிரயோகிக்கப்பட்டுவந்த நிலையில், புதிய கடவுச்சீட்டுகளில் மூன்றாம் இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளமையும், ஜனாதிபதி செயலகத்தினால் அனுப்பப்படும் கடிதங்கள் தனிச்சிங்கள மொழியில் அமைந்திருப்பதும் இந்த நாட்டின் மொழிக்கொள்கையின் தளம்பலையே காட்டுகிறது.

இத்தகைய சம்பவங்களும் , திட்டமிட்ட நகர்வுகளும் "இந்தநாட்டில் ஆட்சி மாற்றம் நிகழ்ந்துள்ளதே தவிர தமிழினத்தின் தலைவிதி ஒருபோதும் மாறப்போவதில்லை" என்ற அபாயச் செய்தியின் அறிவிப்புகளாகவே அமைந்துள்ளன.

இத்தகைய யதார்த்தப் புறநிலைகளை புரிந்துகொண்டு, இந்தத் தேர்தல் களத்தில் பெருந்தேசியவாத கட்சிகளை முழுமையாக நிராகரித்து, இனத்தின் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்யும் காலக்கடமை எமது மக்களின் கைகளிலேயே உள்ளது - என்றார். (அ)

# மக்களை சிந்திக்கவிடாது அரசியல் செய்கின்றனர்!

## தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேட்பாளர் கண்ணன் குற்றச்சாட்டு

வவுனியா, ஒக். 26

தமிழ்த்தேசியம் சார்ந்த அனைவருமே மக்களை சிந்திக்கவிடாத அரசியலினைச்செய்கின்றனர். மக்கள் பல்வேறு துன்பத்தில் உள்ளபோது அவர்கள் பிரச்னைகளை உருவாக்கிக் கொண்டிருக்கின்றனர் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் வன்னி மாவட்ட முதன்மை வேட்பாளர் சந்திரகுமார் கண்ணன் தெரிவித்தார்.

வவுனியாவில் இடம்பெற்ற சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நான் இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியில் முதன்மை வேட்பாளராக போட்டியிடுகின்றேன்.

அரசியலுக்கு வருகின்ற அனைவருமே சொல்கிறார்கள் மக்களுக்கு சேவை செய்யப் போகின்றோம் என்று.

ஆனால் என்னை பொறுத்தவரை கடந்த 14 வருடங்களாக வன்னி மாவட்டத்தில் உள்ள மக்களின் அடிப்படை பிரச்னைகள் தொடக்கம் அன்றாட பிரச்னைகள் வரை நன்கு அறிந்தவன் நான்.

அந்த வகையில் தொடர்ச்சியாக எனது சேவையினை அவர்களுக்காக செய்திருக்கின்றேன்.

அதன் அடிப்படையில் அந்த சேவையின் பலனாக எனக்கு இந்த வாய்ப்பு கிடைத்துள்ளது. எனவே எனது சேவைகளை மேலும் மேம்படுத்தும் நோக்குடன் இந்த தேர்தலில் இறங்கியிருக்கின்றேன்.

இங்கு தமிழ்த் தேசியம் சார்ந்த அனைவருமே மக்களை சிந்திக்கவிடாத அரசியலினைச் செய்கின்றனர். மக்கள் பல்வேறு துன்பத்தில் உழன்றுகொண்டிருக்கின்றனர்.

ஆனால் பிரச்னைகளை உருவாக்கிக்கொண்டு இருக்கவேண்டும் என்பதுவே அவர்களது அரசியலாக உள்ளது.

நாங்கள் அப்படியல்ல. எனவே மக்களே சிந்தியுங்கள். இவருக்கு வாக்கினை போடலாமா என்று பலமுறை சிந்தியுங்கள்.மாற்றம் என்பது மக்கள் மத்தியில் இருந்தே வரவேண்டும். தொடர்ச்சியாக ஒருவரை தெரிவு செய்துவிட்டு ஒன்றும் மாறவில்லை என்று சொல்வதும் முறையல்ல. எனவே மக்களது சிந்தனை மாறவேண்டும் அதன்போதே அவர்களது வாழ்க்கையும் மாறும்-என்றார். (அ)

# உங்கள் வாக்குகளை சிதறடிக்காமல் தகுதியானோரை தெரிவு செய்யுங்கள்

## சட்டத்தரணி எஸ்.டினேசன் கோரிக்கை



மன்னார், ஒக். 26

உறவுகள் தேர்தலில் போட்டியிடுகிறார்கள் என்பதற்காக உங்கள் வாக்குகளை சிதறடிக்காமல் வாக்களிக்கும் போது பொறுப்புடன் செயல்பட்டு தகுதியானவர்களுக்கு வாக்களித்து அவர்களை வெற்றி பெறச் செய்து பாராளுமன்றம் அனுப்பிவையுங்கள் என தமிழரசு கட்சியின் மன்னார் மாவட்ட வேட்பாளர் சட்டத்தரணி எஸ்.டினேசன் தெரிவித்தார்.

தலைமன்னாரில் தமிழரசுக் கட்சியின் தேர்தல் அலுவலக திறப்பு விழாவில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்வரும் 14 ஆம் திகதி இடம் பெற உள்ள பாராளுமன்ற தேர்தலில் வன்னி மாவட்டத்தில் பல கட்சிகள் பிரிந்து போட்டியிடுகின்றன. இதனால் இம்முறை தமிழரசுக் கட்சியின் ஆசனம் குறைவடையும் சந்தர்ப்பம் காணப்படுகின்றது.

ஆகவே மக்கள் ஒன்று திரண்டு தமிழரசுக் கட்சிக்கு வாக்களிக்க வேண்டும்.

எமது பிரதிநிதித்துவத்தை மக்கள் உறுதிப்படுத்த வேண்டும். மக்கள் பொறுப்புணர்வோடு செயற்பட்டு தகுதியானவர்களை பாராளுமன்றத்திற்கு அனுப்ப வேண்டும்.

உறவுகள் தேர்தலில் போட்டியிடுகிறார்கள் என்பதற்காக உங்கள் வாக்குகளை சிதறடிக்காதீர்கள்-என்றார். (அ)

# பாராளுமன்றத்தில் பேரம்பேசும் சக்தியாக ஈ.பி.டி.பியை தமிழ் மக்கள் வலுப்படுத்துவர்

## ஈ.பி.டி.பி வேட்பாளர் சிவகுரு பாலகிருஸ்ணர்





யாழ்ப்பாணம், ஒக். 26

அமையவுள்ள புதிய பாராளுமன்றத்தில் மத்தியில் பேரம் பேசும் சக்தியாக ஈ.பி.டி.பியை தமிழ் மக்கள் வலுப்படுத்துவார்கள் என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளரும் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடும் வேட்பாளருமான சிவகுரு பாலகிருஸ்ணன் (ஜீவன்) நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் -

மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்ற எமது கட்சியின் கொள்கை நிலைப்பாட்டை வலுப்படுத்தி அதனூக மக்களின் நலன்களையும் அவர்களது எதிர்பார்ப்புக்களை நிறைவு செய்து கொள்வதற்காக நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் மக்கள் எமக்கு அதிகளவு ஆதரவை வழங்கவார்கள்.

அத்துடன் மக்கள் எமக்கு வழங்குகின்ற ஆதரவு பலத்தைக் கொண்டே நாம் மத்தியில் அரசமைக்கும் தரப்புக்கு ஆதரவு கொடுத்து, பேரம் பேசும் சக்தியாக அதில் பங்கெடுத்து மக்களின் அபிலாசைகளை பெற்றுக் கொடுக்க முடியும்.

குறிப்பாக அரசியல் புலத்தில் மாற்றம் வேண்டும் என்று எண்ணிய மக்கள் மத்தியில் ஆட்சி அதிகாரத்தை மாற்றி அமைத்துவிட்டனர். அதே போன்று தமிழ் மக்களின் மனங்களிலும் அந்த மாற்றம் ஏற்பட வேண்டும். அந்த மாற்றம் ஈ.பி.டி.பியினராகிய எம்மை நோக்கியதாக இருக்கவேண்டும் என்றே மக்கள் உணர்ந்து கொண்டுவிட்டனர்.

இதேவேளை, மத்தியில் ஆட்சிக்கு வந்துள்ள தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்காவின் அரசியல் கொள்கைக்கும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் அரசியல் கொள்கைக்கும் இடையில் ஒற்றுமை இருக்கின்றது.

ஏனெனில் அவர்களும் போராளிகளாக இருந்து பின்னர் பாராளுமன்ற ஜனநாயக வழிமுறையூடாக வந்தவர்கள். அதே போன்றே ஈ.பி.டி.பியும் இருக்கின்றது. அத்துன் அவர்களும் இடதுசாரிக் கொள்கை உடையவர்கள் எமது கொள்கையும் இடதுசாரிக் கொள்கையாகவே இருக்கின்றது. அத்துடன் எமக்கும் அவர்களுக்கும் இடையே இருக்கின்ற அரசியல் ரீதியான கொள்கைகளும், பரஸ்பர புரிந்துணர்வும் சிறப்பானதாகவும் இருக்கின்றது-என்றார். (அ)

# பொத்துவிலில் மக்கள் பிரதிநிதித்துவத்தை வென்றெடுக்க எமது கட்சியே பாடுபட்டது!

அம்பாறை, ஒக். 26

அகில இலங்கை மக்கள் காங்கிரஸூக்கு துரோகம் செய்த எவரும் அரசியலில் நிலைக்கப் போவதில்லை, இம்முறை பொதுத் தேர்தல் முடிவுகள் இதனை உண்மைப்படுத்தும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

பொத்துவிலில் நடந்த கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொத்துவில் பிரதேசத்தில் ஒரு பிரதிநிதித்துவம் அவசியம். இதற்காகவே, பல தடவைகள் எமது கட்சி இங்கு வேட்பளார்களை நிறுத்தியது. 2015 பொதுத் தேர்தலில், எஸ்.எஸ்.பி.மஜீதை வேட்பாளராக்கினோம். இந்த ஊரில் மாத்திரம் அவருக்கு [illegible] வாக்குகள் அளிக்கப்பட்டன. இதையடுத்து வந்த பொதுத் தேர்தலில் முஷராப்பை வேட்பாளராக்கினோம். பொத்துவில் மக்கள் வழங்கிய 95000 வாக்குகளுடன் வேறு பிரதேச வாக்குகளும் கிடைத்ததால், முஷாரப் எம்.பி.யாகத் தெரிவானார். இவரின் வெற்றிக்காக ஊரே உழைத்தது. பலரும் நிதியுதிவி செய்தனர். ஓட்டோ ஓடுபவர்கள், நாளாந்த தொழிலாளிகள் மற்றும் வெளிநாடுகளில் உழைப்போர் எனப் பலரும் நிதியுதவி வழங்கி முஷாரப்பை வெல்ல வைத்தனர். ஏன்? ஊரின் பிரதிநிதித்துவத்தைப் பாதுகாப்பதற்கே. ஆனால், அவர் செய்த வேலைகளால், பொத்துவில் நற்பெயருக்கே களங்கம் ஏற்பட்டது.

அம்பாறை மாவட்டத்தில் இன ஒற்றுமை அவசியம் பேணப்படல் வேண்டும். விசேடமாக தமிழ் மக்களுடன் நல்லுறவைக் கட்டியெழுப்புங்கள். மூவினத்தவரையும் அரவணைத்துச் செல்லும் கட்சியே அகில இலங்கை மக்கள் காங்கிரஸ். இங்குதான் அரசியல் ஆளுமைகள் வளர்க்கப்படுகின்றன. இதனால், இம்முறை போட்டியிடும் சகல வேட்பாளர்களிடமும் உறுதியான சத்தியக்கடதாசி வாங்கியுள்ளோம். சமூகத்துக்கு துரோகமிழைப்போர், அரசியலில் நிலைத்ததாக வரலாறே இல்லை-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச ஊழியர் சம்பள அதிகரிப்புக்கு நிதியை ரணில் அரசு ஒதுக்கவில்லை

## ஜனாதிபதி அநுரகுமார குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 26

**முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கூற்றுக்களை மறுத்துள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்குத் தேவையான நிதியை ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் ஒதுக்கவில்லை என தெரிவித்துள்ளார்.**

புத்தளத்தில் நடைபெற்ற தேர்தல் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜனாதிபதி, பல்வேறு செலவினங்களுக்கான மேலதிக நிதி, வரவு-செலவுத் திட்டம் அல்லது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் கணக்கு வாக்கெடுப்பு மூலம் நிதி ஒதுக்கப்படுவது வழமையாகும்.

எனினும் கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கான அஞ்சல் மூல வாக்களிப்புக்கு சில நாட்களுக்கு முன்னர் அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கான தீர்மானம், ரணில் விக்கிரமசிங்கவினால் அவசரமாக எடுக்கப்பட்டது.

பொதுத் துறையினரின் சம்பளத்தை அதிகரிப்பதற்கான அமைச்சரவை தீர்மானம், செப்ரெம்பர் 4, 5 மற்றும் 6 ஆம் திகதிகளில் இடம்பெற்ற அஞ்சல் மூல வாக்களிப்புக்கு முன்னதாக



செப்ரெம்பர் 3 ஆம் திகதி எடுக்கப்பட்டது. எனினும் நிதி ஒதுக்கப்படவில்லை.

எவ்வாறாயினும், அரச துறையினரின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு 2025 வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் நிதியை ஒதுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது-என்றார்.

(அ)

# தோல்வியடைந்த பொருளாதார கொள்கையை பின்பற்றும் அரசு

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 26

அரசாங்கத்தினால் பொருட்களின் விலைகளை கட்டுப்படுத்த முடியவில்லை என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அவிசாவளையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

பொருட்களின் விலைகளை கட்டுப்படுத்திக்கொள்ள முடியாத வகையிலான தோல்வியடைந்த பொருளாதார கொள்கைகளை அரசாங்கம் பின்பற்றுவதாக அவர் கூறினார்.

குறுகிய காலத்தில் உணவு பானங்கள் உள்ளிட்ட பொருட்களுக்கு தட்டுப்பாடு உருவாகியுள்ளதாகவும் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் உயர்



வடைந்துள்ளதாகவும், இதனால் வறிய மக்களின் வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அரசாங்கம் தேர்தலின்போது அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற தவறியுள்ளதாகவும் சஜித் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியின் கீழ் பொருட்களின் விலைகள் கட்டுப்படுத்தப்படுவதுடன் வலுவான பொருளாதாரக் கொள்கைகள் பின்பற்றப்படும் என்றும் அவர் கூறினார்.

# நானே மிகப் பெரிய தமிழ்த்தேசியவாதி!

## கூறுகிறார் அங்கஜன்

வடமராட்சி ஒக். 26

"தமிழ் தேசிய அரசியல் செய்பவர்கள் தமிழ் மக்களை அழித்துத்தான் தமிழ் தேசியத்தைப் பெற்று தருவோம் என்று சொல்லிக் கொள்வதில் எனக்கு உடன்பாடு இல்லை. நான் நம்புகிறேன், தமிழ் மக்கள் இங்கு வழ்ந்தால்தான் தமிழ் தேசியம் இருக்கும். பிரான்சிலோ கனடாவிலோ தமிழ் தேசியம் பற்றிப் பேசமுடியாது. அங்கு உருவாக்கவும் முடியாது.

அந்த வகையில் தமிழ் மக்கள் வழ்ந்தால்தான் தமிழ் தேசியம் இருக்கும் என்ற அடிப்படையில், நான்தான் மிகப் பெரிய தமிழ்த்தேசியவாதி. ஏன் என்றால் நான் தமிழ் மக்கள் வாழும் வேலைத்திட்டத்தை முன்னெடுத்து வருகிறேன். எமது மக்களது அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டால்தான் அவர்கள் இங்கு வசதியாக வாழ முடியும்."

இவ்வாறு எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் தபால் பெட்டி சின்னத்தில் போட்டியிடும் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், நல்லூர், செல்லர் வீதியில் அமைந்துள்ள பூதவராயர் சிவன் ஆலயத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நான் நல்லாட்சிக் காலத்தில் ஐந்து மாதங்கள் மட்டுமே அமைச்சராக இருந்துள்ளேன். அந்தக் காலப் பகுதியில் 600 மில்லியன் ரூபா நான் மக்களுக்காகக் கொண்டு வந்துள்ளேன். அந்த அடிப்படையில் நான் தனியாக வெற்றியடையும் பட்சத்தில் அரசுடன் இணைந்து பணியாற்ற வாய்ப்புகள் உள்ளன.

அந்த அடிப்படையில் மக்கள் விடுத்த கோரிக்கை, தனியாகத் தனிக் கட்சிகளில் இருந்து வாங்கோ என்பதுதான். அவ்வாறாயின் வரவேற்பைத் தருவோம் என்றும் மக்கள் தெரிவித்துள்ளனர். ஆலயங்கள், மலசலகூடங்கள் போன்ற திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன - என்றார்.

(அ-2)

# ம. ம. முன்னணியின் பலர் அனுஷா சந்திரசேகரன் பக்கம்

கொழும்பு, ஒக். 26

நுவரெலியா பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சதாசிவன், மலையக மக்கள் முன்னணியின் முன்னாள் பிரதி செயலாளர் பத்மநாதன், முன்னாள் அமைப்பு செயலாளர் நல்லமுத்து, மத்திய குழு உறுப்பினர் சந்திரமணி உட்பட மலையக மக்கள் முன்னணியின் 15 இற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள், பொதுத்தேர்தலில் தமது ஆதரவை ஐக்கிய ஜனநாயக குரலின் நுவரெலியா மாவட்ட வேட்பாளர் அனுஷா சந்திரசேகரனுக்கு வழங்கியுள்ளனர். அவரின் வெற்றிக்காக முழு ஆதரவு வழங்கப்படும் எனவும் உறுதி பூண்டுள்ளனர்.

இவர்களுடன் இணைந்து நடத்தப்பட்ட ஊடக சந்திப்பின்போது அனுஷா சந்திரசேகரன் கூறியவை வருமாறு-

எமது மலையக மக்களும் மாற்றத்துக்கு தயாராகிவிட்டனர். பழைய முகங்களை அகற்றிவிட்டு, புதியவர்களை நாடாளுமன்றம் அனுப்புவதற்கு உறுதிபூண்டுள்ளனர். இது விடயத்தில் மக்கள் மிகவும் தெளிவாகவே உள்ளனர்.

இதனால் கட்சியில் இருந்து பலர் வெளியேறுகின்றனர். முன்னாள் பிரதேச சபை தலைவர், பிரதி தலைவர், உறுப்பினர்கள் மற்றும் கட்சி செயற்பட்டாளர்கள், உத்தியோகத்தர்கள் என பலரும் எனக்கு ஆதரவு வழங்கியுள்ளனர்-என்றார்.

(அ)

# மக்களின் ஆதரவை கோருகிறார் நாமல்

கொழும்பு, ஒக். 26

தற்போது மக்களுக்காக குரல் எழுப்புவது பொதுஜன பெரமுன மட்டுமே எனவும், பாராளுமன்றத்தில் அதிக ஆசனங்களை வழங்க மக்கள் ஆதரவளிக்கவேண்டுமென பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் மாத்தளை தொகுதி அலுவலகம் நாமல் ராஜபக்ஷ தலைமையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கட்சியின் செயற்பாட்டாளர்கள் குழுவொன்றும் இந்நிகழ்வில் கலந்துகொண்டது. (அ)

# திருடப்பட்ட அனைத்து சொத்துகளையும் மீள பெற்றுக்கொள்ள பின்னடிக்கும் அநுர!

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 26

எமது நாட்டில் திருடி வெளிநாடுகளில் மறைத்து வைக்கப்பட்டுள்ள சொத்துக்களை மீள நாட்டுக்கு பெற்றுக்கொள்வதற்கு இலகுவாக நடவடிக்கை எடுக்க முடியுமாகியுள்ளபோதும் ஜனாதிபதி அதனை செய்ய பின்வாங்கி வருகிறார். திருடப்பட்ட சொத்து மீட்பு செயல் திட்டத்தை எமது நாட்டில் உள்வாங்குமாறு கோரி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஐக்கிய நாடுகள் அமைப்புக்கு ஒரு கடிதம் அனுப்பினால் ஒரு வருடத்துக்குள் திருடப்பட்ட அனைத்து சொத்துக்களையும் மீள பெற்றுக்கொள்ள முடியும் என ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட வேட்பாளர் சட்டத்தரணி ஷானக்க சேனாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஐக்கிய நாடுகள் அமைப்பு 2003 இல் ஊழல் எதிர்ப்பு கொள்கை திட்டத்தை அனுமதித்துக்கொண்டது. அந்த கொள்கை திட்டத்தில் எமது நாடும் கைச்சாத்திட்டுள்ளது. அந்த கொள்கை திட்டத்தின் 7ஆம் உறுப்புரையில் நாடொன்றில் திடப்பட்ட சொத்துக்கள் வளங்களை எவ்வாறு மீள பெற்றுக்கொள்வது என்ற பொறிமுறை உள்ளது.

அதற்கு திருடப்பட்ட சொத்து மீட்பு செயற்திட்டம். ஸ்டார் வேலைத்திட்டம் என அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது. ஸ்டார் வேலைத்திட்டம் 2007ஆம் ஆண்டே ஐக்கிய நாடுகள் அமைப்பு அறிமுகப்படுத்தியது. 17 வருடங்களாக இருந்து வரும் இந்த வேலைத்திட்டம் தொடர்பில் எமது அரசியல்வாதிகள் மற்றும் அரச தலைவர்களுக்கு தெரியாதா எனக் கேட்கிறேன்.

ஸ்டார் வேலைத்திட்டம் உலக வங்கியும் ஐக்கிய நாடுகள் அமைப்பும் இணைந்து மேற்கொண்டுள்ள திட்டமாகும். எந்தவொரு நாட்டின் தலைவரும் ஐக்கிய நாடுகள் அமைப்புக்கு இந்த ஸ்டார் திட்டத்தை தமது நாட்டில் உள்வாங்குமாறு கோரி கடிதம் எழுதினால் அந்த திட்டம் அமுல்படுத்தப்படும்.

தற்போது ஜனாதிபதியாக இருக்கும் அநுகுமார திஸாநாயக்க வெளிநாடுகளில் இருக்கும் நாட்டின் சொத்துக்களை மீள பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக தேர்தல் பிரசாரங்களில் தெரிவித்து வந்தார். ஆனால் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அநுரகுமார திஸாநாயக்க ஐக்கிய நாடுகள் அமைப்புக்கு இது தொடர்பில் ஒரு கடிதம் எழுதினால், ஒரு வருடத்துக்குள் எமது நாட்டில் திருடி வெளிநாடுகளில் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் அனைத்து சொத்துக்களையும் மீள பெற்றுக்கொள்ள முடியும்-என்றார். (அ)

# ஈஸ்டர் தாக்குதலை மறைத்தோரே தற்போது கேள்வி எழுப்புகின்றனர்!

## பிரதமர் ஹரிணி அமரசூரிய



கொழும்பு, ஒக். 26

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பான தகவல் கிடைத்திருந்த போதிலும் அவற்றை மறைத்த தரப்பினரே, தற்போது அதன் விசாரணை தொடர்பில் கேள்வி எழுப்ப ஆரம்பித்துள்ளனர் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

அக்குரேகொட பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

75 ஆண்டுகளாக அமைதியாக இருந்தவர்கள் தற்போது குழப்பம் ஏற்படுத்துகின்றனர்.

ஏப்ரல் 21 தாக்குதலின்போதும் அமைதியாக இருந்தவர்கள் தற்போது எங்களிடம் கேள்வி எழுப்புவதாகப் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டு. நீதிமன்றத்துக்கு வெடிகுண்டு மிரட்டல்!

## விசேட அதிரடிப்படையினர் களத்தில் மோப்பநாய் சகிதம் தேடுதல்

மட்டக்களப்பு, ஒக். 26

**மட்டக்களப்பு நீதிமன்ற கட்டடத் தொகுதியை வெடிகுண்டு வைத்து தகர்க்கப் போவதாக வந்த மர்ம கடிதத்தையடுத்து, நீதிமன்ற கட்டட தொகுதிக்கு விசேட பாதுகாப்பு வழங்கப் பட்டுள்ளது.**

மட்டக்களப்பு நீதிமன்ற கட்டடத் தொகுதியை குண்டு வைத்து தகர்த்தப் போவதாக பொலிஸாருக்கு கிடைத்த மிரட்டல் கடிதம் ஒன்றையடுத்து

நேற்றுக் காலை விசேட அதிரடிப்படையினர், பொலிஸார் இணைந்து நீதிமன்ற கட்டடத் தொகுதியில் மோப்பநாய் சகிதம் பலத்து தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர். அப் பகுதியில் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை நீதிமன்ற அலுவலக நடவடிக்கைகளுக்காக வருகை தந்த அனைத்து உத்தியோகத்தர்களும் உள்ளே செல்ல அனுமதிக்கப்படாமல், தடுத்து நிறுத்தப்பட்டு சோதனை நடவடிக்கைகளின் பின்னர் நீதிமன்ற அலுவலக நடவடிக்கைகளுக்காக உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

சந்தேகத்துக்குரியவிதமாக, இதுவரை எந்தவித பொருட்களும் மீட்கப்படாத நிலையில், பாதுகாப்புப் படையினரின் விசேட பாதுகாப்பு, கண்காணிப்புக்கு மத்தியில், நீதிமன்ற நடவடிக்கைகள் வழமை போன்று நடைபெற்றன.

(எ)

# தமிழ்த் தினப் போட்டியில் சாதித்த மட்டு. வலய மாணவர்கள் கௌரவிப்பு

மட்டக்களப்பு, ஒக். 26

தமிழ்த் தின போட்டி மற்றும் தேசிய மட்ட விளையாட்டு நிகழ்வுகளில் சாதித்த மட்டக்களப்பு வலயத்தைச் சேர்ந்த மாணவர்கள் நேற்றுக் கௌரவிக்கப்பட்டனர்.

தமிழ்த் தினப் போட்டியில் கிழக்கு மாகாணம் முதலிடத்தைப் பெற்றுக்கொண்ட நிலையில் இதற்குப் முதன்மைப் பங்களிப்பு வழங்கிய மட்டக்களப்பு வலய மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நடைபெற்றது.

கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளரும், மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளருமான சுஜாதா குலேந்திரகுமார் தலைமையில் வலயக் கல்வி அலுவலகத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

தமிழ்த் தினப் போட்டியில் மட்டக்களப்பு வலயத்தைச் சேர்ந்த மாணவர்கள் நான்கு தங்கப் பதக்கங்கள், 5 வெள்ளிப் பதக்கங்கள், இரண்டு வெண்கலப் பதக்கங்கள் என 11 பதக்கங்களைச் சுவீகரித்துக்கொண்டனர்.

இதன் மூலம் கிழக்கு மாகாணம் தேசிய ரீதியில், முதன்மை பெற்றுக்கொள்வதற்கு முக்கிய பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது. மாணவர்களும், மாணவர்களைப் பயிற்றுவித்த ஆசிரியர்களும் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

இதேவேளை, நடைபெற்று வரும் தேசிய மட்ட விளையாட்டு நிகழ்வில் பதக்கங்களைப் பெற்றுக்கொண்ட மட்டக்களப்பு வலய பாடசாலைகளைச் சேர்ந்த தடகள வீரர்களும் கௌரவிக்கப்பட்டனர்.(எ)



# பாடசாலைக்குள் நுழைந்து காட்டு யானை அட்டகாசம்

சேருவில, ஒக். 26

திருகோணமலை, சேருவில கல்விப் பிரிவுக்குட்பட்ட தெஹிவத்தை மகா வித்தியாலயத்துக்குள் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை காட்டு யானையொன்று நுழைந்து அட்டகாசம் செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

யானையின் அட்டகாசத்தால் பாடசாலை கட்டடத்தின் கூரை மீது தென்னை மரமொன்று வீழ்ந்த தில் கட்டடத்தின் கூரை சேதம டைந்ததாக பொலிஸார் கூறினர்.

மேலும், பாடசாலையின் நீர்க் குழாய்கள் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சில நாட்களில் காலையில் பாடசாலையை திறக்க வரும்போது யானை பாடசாலைக்குள்ளேயே இருப்பதாகவும் அவ்வாறான சமயங்களில் பெற்றோர்களை அழைத்து யானை விரட்டப்படுவதாகவும் அதிபர் தெரிவித்தார்.

(எ)

# சேவை நலன் பாராட்டு விழா!



சம்மாந்துறை, ஒக். 26

சம்மாந்துறை வலயத்தில் 26 வருடங்கள் கடமையாற்றி 36 வருடம் கல்விச்சேவை ஆற்றி கடந்த வாரம் ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் வி. ரி. சகாதேவராஜாவுக்கு நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயத்தில் சேவை நலன் பாராட்டு விழா அதிபர் மா. தர்மலிங்கம் தலைமையில் வியாழக்கிழமை நடைபெற்றது.

# என்னை கட்சியிலிருந்து நீக்கியதாக பொய்யுரைப்பதை கண்டிக்கிறேன்

## முன்னாள் எம். பி. அரியநேத்திரன்

மட்டக்களப்பு, ஒக். 26

என்னை கட்சியிலிருந்து நீக்கியதாக பொய்யுரைத்து வருவதை வன்மையாக கண்டிக்கின்றேன் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக போட்டியிட்டவருமான பா. அரியநேத்திரன் தெரிவித்தார்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியிலிருந்து இதுவரை நீக்கப்படவில்லை. நான் பொது வேட்பாளராக போட்டியிட்ட காரணத்தால் ஒரு விளக்கம் கூறுமாறு கடிதம் மாத்திரமே அனுப்பப்பட்டுள்ளது- என்றார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன், தமிழ் அரசுக் கட்சியிலிருந்து அரியநேத்திரன் நீக்கப்பட்டு விட்டார் என்று தெரிவித்துவரும் கருத்து தொடர்பில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அரியநேத்திரன் மேற்கண்டவாறு கூறினார்.



"நான் கட்சியில் இருந்து இதுவரை நீக்கப்படவில்லை. நான் பொது வேட்பாளராக போட்டியிட்ட காரணத்தால் ஒரு விளக்கம் கூறுமாறு கடிதம் மாத்திரமே அனுப்பப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் அதற்கான பதிலை நான் அனுப்பி வைத்துள்ளேன். இவ்வளவுதான் நடந்து முடிந்திருக்கின்றது.

என்னை மத்திய குழு தீர்மானத்தின்படி தமிழ் அரசுக்கட்சி நிர்வாக சபைக் கூட்டங்களில் கலந்து கொள்ளக் கூடாது என்கின்ற தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. நான் அதனையேற்று அக் கூட்டங்கள் எதிலும் கலந்து கொள்ளவில்லை.

கட்சியை விட்டு விலக்குவதாயின் யாப்பு விதிமுறைகளின் படி பல நடைமுறைகள் இருக்கின்றன. இந்த நிலையில் யாப்பு விதிமுறையை அறியாதவர்கள் மத்திய குழுவில் இல்லாதவர்கள் என்னை கட்சியை விட்டு நீக்கியுள்ளதாக தெரிவித்து வருகின்றனர்" என அரியநேத்திரன் மேலும் தெரிவித்தார். (எ)

# ரயிலுடன் மோதி இளைஞன் பலி

ஏறாவூர், ஒக். 26

மட்டக்களப்பு - ஏறாவூர் குடியிருப்பு பிரதேசத்தில் ரயிலுடன் மோதி 32 வயது இளைஞன் ஒருவர் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 8. 25 மணியளவில் இடம்பெற்றதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

ஏறாவூரைச் சேர்ந்த எம். என். எம். முஜாஹித் என்பவரே இவ்வாறு உயிரிழந்தார் என்று அடையாளங் காணப்பட்டுள்ளது. மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கி ரயிலில் சென்று கொண்டிருந்த வேளை இவர் திடீரென தண்டவாளத்தில் பாய்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இவரது சடலம் ஏறாவூர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு திடீர் மரண விசாரணையதிகாரி எம். எஸ். எம் நசீர் பார்வையிட்டு முதற் கட்ட விசாரணைகளை முன்னெடுத்தார். (எ)

# பொதுமக்களின் பங்களிப்புடன் அபிவிருத்தித் திட்டம் தயாரிப்பு

சம்மாந்துறை, ஒக். 26

விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் 10 மில்லியன் ரூபாய் நிதி, செந்நெல் - 02 கிராமத்தில் விவசாய உட்கட்டமைப்பு வசதிகள், வாழ்வாதார மேம்பாட்டு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அந்த வகையில் குறித்த நிதியை பெற்றுக் கொள்வதற்காக பொதுமக்கள் பங்களிப்புடனான கிராம அபிவிருத்தித் திட்டமொன்றை கிராம மக்களிடம் நேரடியாக கேட்டறிந்து கொள்ளுவதற்கான செயல்பாட்டு திட்டம் தயாரிக்கும் நிகழ்வு வியாழக்கிழமை செந்நெல் கிராமத்தில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ். எல். முஹம்மது ஹனீபாவின் வழிகாட்டல் மற்றும் ஆலோசனைக்கு அமைய கிராம உத்தியோகத்தர் எஸ். எம். எம். அரபாத் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் எம். ஏ. சம்ஸத் ஆகியோர்களின் ஒழுங்கமைப்பின் கீழ் சம்மாந்துறை பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ. எல். எம் அஸ்லம் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது சம்மாந்துறை உதவிப் பிரதேச செயலாளர் எம் அஸ்லம் கலந்து கொண்டு மக்கள் பங்களிப்புடனான கிராமிய வளத் திட்டத்தின் முக்கியத்துவம் அதன் நோக்கம் ஆகியவற்றை தெளிவுபடுத்தினார்.

மேலும் விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பள்ளிவாசல் நிர்வாகிகள், கிராம அபிவிருத்தி சங்கப் பிரதிநிதிகள், பொது மக்கள் எனப் பலரும் இதில் கலந்து கொண்டனர்.

மக்கள் பங்களிப்புடனான கிராமிய அபிவிருத்தித் திட்டத்தை தயாரிக்கும் நிகழ்வுக்கு பிரதம வளவாளராக அக்கரைப்பற்று பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் எச். ஜமாலி கலந்து கொண்டு கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜஸ்டின் பதவி விலக கெடு; 24 எம்.பிக்கள் போர்க்கொடி

ஒட்டாவா, ஒக். 26

**கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ நாளை மறுதினம் 28ஆம் திகதிக்குள் பதவி விலக வேண்டும் என்று அவரது கட்சி எம்.பிக்கள் 24 பேர் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.**

காலிஸ்தான் பிரிவினைவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலையில் இந்தியாவுக்கு தொடர்பு இருப்பதாக ஜஸ்டின் ட்ரூடோ குற்றஞ்சாட்டி வருகிறார். இதன் காரணமாக இரு நாடுகள் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டிருக்கிறது.

கனடா பிரதமரின் குற்றச்சாட்டுக்கு அந்த நாட்டின் பிரதான எதிர்க்கட்சிகள் கண்டனம் வெளியிட்டுள்ளன. ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கனடா பிரஜை இல்லை. சீனாவின் தூண்டுதலின்பேரில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ செயல்பட்டு வருகிறார் என்று எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டி வருகின்றன. இந்தச் சூழலில் ஆளும் லிபரல் கட்சியில் பிரதமர் ஜஸ்டினுக்கு எதிராக 24 எம். பிக்கள் போர்க்கொடி உயர்த்தியுள்ளனர். இது அவருக்கு மிகப்பெரிய நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பில் விவாதிக்க ஆளும் கட்சியின் உயர்நிலைக் கூட்டம் நடைபெற்றது. இதில் பங்கேற்ற அதிருப்தி எம். பிக்கள், வரும் 28ஆம் திகதிக்குள் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பதவி விலக வேண்டும். இல்லையெனில் கடுமையான பின் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று எச்சரிக்கை விடுத்தனர்.



(எ)



# புயல், வெள்ளம், நிலச்சரிவு பிலிப்பைன்ஸில் 23 பேர் பலி

மணிலா, ஒக். 26

பிலிப்பைன்சில் புயல் காரணமாக ஏற்பட்ட வெள்ளம், நிலச்சரிவில் சிக்கி 23 பேர் உயிரிழந்தனர்.

வடகிழக்கு பிலிப்பைன்ஸ் நாட்டின் இசபெலா மாகாணத்தில் நேற்று அதிகாலை ட்ராமி என்ற புயல் தாக்கியது. இந்த புயலால் ஏற்பட்ட மழை, வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளில் சிக்கி 23 பேர் உயிரிழந்தனர்.

பல வீடுகள், கார்கள் நீரில் மூழ்கின. வீடுகளில் சிக்கியுள்ள மக்களை மீட்க மோட்டார் படகுகளில் மீட்புக்குழுவினர் ஈடுபட்டுள்ளனர்.

(எ)

# இந்தியா - சீனா ஒப்பந்தம் லடாக்கில் படைகள் வாபஸ்

லடாக், ஒக். 26

கிழக்கு லடாக் எல்லைப் பகுதியில் இருந்து இந்தியாவும் சீனாவும் தங்களது இராணுவத்தை திரும்பப் பெறும் நடவடிக்கையை தொடங்கியுள்ளன.

கிழக்கு லடாக், அருணாச்சலப் பிரதேச எல்லை விவகாரத்தில் இந்தியா - சீனா இடையே பல ஆண்டுகளாக மோதல் நிலவுகிறது. கடந்த ஜூன் 2020 இல் கல்வான் பள்ளத்தாக்கில் இரு நாட்டு இராணுவத்துக்கும் இடையே கடுமையான மோதல் ஏற்பட்டது. இதையடுத்து, இரு நாடுகளுக்கும் இடையேயான உறவில் பெரிய விரிசல் விழுந்தது. கிழக்கு லடாக் பகுதிகளில் இரு நாட்டு இராணுவமும் படைகளை குவித்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

தற்போது கிழக்கு லடாக்கின் டெப்சாங் பகுதியில் உள்ள "ஒய்" சந்திப்பு மற்றும் டெம்சோக்கில் உள்ள சார்டிங் நுல்லா சந்திப்பு பகுதிகளில் இருந்து இரு நாட்டு படையினரும் பின்வாங்கியுள்ளனர். மேலும், அந்த பகுதிகளில் இரு நாட்டு படையினரும் அமைத்திருந்த தற்காலிக கட்டுமானங்கள் மட்டுமே அகற்றப்பட்டுள்ளன.

கல்வான் பள்ளத்தாக்கு மோதலுக்கு பிறகு எல்லையில் தொடர்ந்து பதற்றமான சூழல் நிலவிய நிலையில் தற்போது 4 ஆண்டுகளுக்கு பிறகு இரு நாட்டு படையினரும் பின்வாங்க தொடங்கியுள்ளனர்.

(எ)

# சென்னை - ரஷ்யா கடல் வழித்தட திட்டத்தில் யாரும் பங்கேற்கலாம்

## ரஷ்ய ஜனாதிபதி புடின் அழைப்பு

மொஸ்கோ, ஒக். 26

சென்னை - ரஷ்யா கடல் வழித்தட திட்டத்தில் விருப்பமுள்ள நாடுகள் பங்கேற்கலாம் என்று பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் அழைப்பு விடுத்துள்ளார்.

ரஷ்யாவின் கசான் நகரில் பிரிக்ஸ் அமைப்பின் 16ஆவது உச்சி மாநாடு நடைபெற்றது.

இறுதிநாள் மாநாட்டில் ரஷ்ய ஜனாதிபதி புடின் உரையாற்றும்போது, "அமெரிக்காவின் டொலருக்கு மாற்றாக பிரிக்ஸ் நாடுகள் சார்பில் புதிய பணப் பரிமாற்றத்தை உருவாக்க வேண்டும். வடக்கு கடல் வழி மற்றும் வடக்கு - தெற்கு சர்வதேச போக்குவரத்து திட்டத்தில் விருப்பமுள்ள நாடுகள் இணையலாம்.

அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரத் தடைகளால் ரஷ்யாவின் சர்வதேச கடல்வழி சரக்கு போக்குவரத்தில் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இதற்கு தீர்வு காண ஆர்டிக் கடல் சார்ந்த வடக்கு கடல் வழித் திட்டத்துக்கு ரஷ்யா முன்னுரிமை வழங்கி வருகிறது.

இந்த திட்டத்தின் ஒரு பகுதியாக இந்தியாவின் சென்னை, ரஷ்யாவின் விளாடிவோஸ்டாக் நகரங்களை இணைக்கும் கடல் வழித்திட்டத்தை செயல்படுத்த இரு நாடுகளும் திட்டமிட்டுள்ளன. புதிய கடல் வழி திட்டம் தொடர்பில் புதுடில்லியில் அண்மையில் இந்திய, ரஷ்ய உயரதிகாரிகளின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. அப்போது ஆர்டிக் கடல் பகுதியில் பனிக்கட்டிகளை உடைத்து செல்லும் சரக்கு கப்பல்களை வடிவமைப்பது குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டது"- என்றார்.



(எ)



# லெபனானுக்கு பிரான்ஸ் ரூ. 900 கோடி நிதியுதவி

பாரிஸ், ஒக். 26

போரினால் பாதிக்கப்பட்டுள்ள லெபனானுக்கு பிரான்ஸ் சார்பில் சுமார் 900 கோடி ரூபாய் உதவியாக வழங்கப்படும் என்று பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மக்ரோன் அறிவித்துள்ளார்.

இஸ்ரேலுக்கும் லெபனான் நாட்டில் செயல்படும் ஹிஸ்புல்லா போராளிகளுக்கும் இடையிலான போரினால் லெபானில் 2,500இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இலட்சக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். அந்த நாட்டில் பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்துள்ளது.

இந்த நிலையில் லெபனானுக்கு பிரான்ஸ் சார்பில் 10 கோடி யூரோ (இந்திய ரூபாய் மதிப்பில் சுமார் ரூ. 908 கோடி) வழங்கப்படும் என பிரான்ஸ் ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

# பாடசாலைமீது இஸ்ரேல் தாக்குதல்

## காஸாவில் 16 பேர் பலி

காஸா, ஒக். 26

காஸாமுனையின் மத்திய பகுதியில் உள்ள ஒரு பாடசாலையின் மீது இஸ்ரேல் இராணுவம் தாக்குதல் நடத்தியது. இதில் 16 பேர் உயிரிழந்தனர். அந்த பாடசாலையில் போரால் வீடுகளை இழந்த மக்கள் முகாமிட்டு தங்கியிருந்தனர். இந்த நிலையில், இஸ்ரேல் இராணுவம் நடத்திய தாக்குதலில் 16 பேர் உயிரிழந்ததாக பலஸ்தீன மருத்துவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதேபோல், நுசய்ரத் என்ற பகுதியில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிக பாதுகாப்பு முகாம் மீதும் இஸ்ரேல் இராணுவம் தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதலில் 32 பேர் படுகாயமடைந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

(எ)



# 120 கி.மீ. வேக காற்றுடன் கரையை கடந்தது டானா

## ஒடிசா, மேற்கு வங்கத்தில் கனமழை

கொல்கத்தா, ஒக். 26

வங்கக் கடலில் நிலை கொண்டிருந்த டானா புயல் கரையைக் கடந்தது. வியாழக்கிழமை இரவு தொடங்கி நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை வரை கரையைக் கடந்தது. வடக்கு ஒடிசா கடற்கரை அருகே உள்ள பிதர் கனிகா மற்றும் தாமரா இடையே அதிகாலையில் தீவிரப் புயலாகக் கரையைக் கடந்தது. அப்போது, மணிக்கு 120 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீச தீவிர புயலாகக் கரையைக் கடந்தது. 6 மணி நேரம் புயல் கரையைக் கடந்தது இதனால் ஒடிசா மற்றும் மேற்குவங்க மாநிலங்களில் கடுமையான சூறைக்காற்றுடன் கனமழை கொட்டித் தீர்த்தது. ஒடிசாவின் ஜகத்சிங்பூர், கேந்திரபாரா, பத்ரக் மற்றும் பால்சோர் மாவட்டங்களில் தொடர்ந்து கன மழை பெய்து வருகிறது.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாண்ட்னர் சுழலில் சிக்கிய இந்தியா வெறும் 156 ஓட்டங்களுக்கு சுருண்டது




புனே, ஒக். 26

இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் இந்தியா 156 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் பறிகொடுத்தது.

நியூசிலாந்து அணி சார்பில் அபாரமாக பந்து வீசிய சாண்ட்னர் 7 விக்கெட்களை வீழ்த்தி அசத்தினார்.

இந்தியா - நியூசிலாந்து இடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி புனேயில் நேற்று முன்தினம் தொடங்கியது. இதில் நாணயச்சுழற்சியில் வென்ற நியூசிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடுவதாக அறிவித்தது. இதன்படி முதல் இன்னிங்ஸை தொடங்கிய நியூசிலாந்து அணியை சுழலுக்கு சாதகமான இந்த ஆடுகளத்தில் இந்திய அணியின் பந்து வீச்சாளர்கள் திணறடித்தனர். குறிப்பாக அஸ்வின் மற்றும் வாஷிங்டன் சுந்தர் நியூசிலாந்து அணியின் மொத்த விக்கெட்களையும் வீழ்த்தி அசத்தினர்.

இவர்களின் சிறப்பான பந்து வீச்சால் நியூசிலாந்து முதல் இன்னிங்ஸில் 259 ஓட்டங்களில் சகல விக்கெட்களையும் இழந்தது. அதிகபட்சமாக டெவான் கான்வே 76 ஓட்டங்களும், ரச்சின் ரவீந்திரா 65 ஓட்டங்களும் எடுத்தனர். இந்தியா தரப்பில் வாஷிங்டன் சுந்தர் 7 விக்கெட்களும், அஸ்வின் 3 விக்கெட்களும் கைப்பற்றி அசத்தினர்.

இதனையடுத்து முதல் இன்னிங்ஸை தொடங்கிய இந்தியா நேற்று முன்தினம் முதல் நாள் ஆட்ட நேர முடிவில் ஒரு விக்கெட்டை இழந்து 16 ஓட்டங்கள் எடுத்திருந்தது. ஜெயஸ்வால் 6 ஓட்டங்களுடனும், கில் 10 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். இந்த நிலையில், 2ஆம் நாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது.

இதில் தொடர்ந்து விளையாடிய இந்தியா அணியினர், நியூசிலாந்தின் பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்களை இழந்தனர். இதில் கில் 30 ஓட்டங்களிலும், ஜெய்வால் 30 ஓட்டங்களிலும், கோலி ஓர் ஓட்டத்திலும், ரிஷப் பண்ட் 4 ஓட்டங்களிலும், சர்பராஸ் கான் 11 ஓட்டங்களிலும், அஸ்வின் 4 ஓட்டங்களிலும், ஜடேஜா 38 ஓட்டங்களிலும், ஆகாஷ் தீப் 6 ஓட்டங்களிலும், பும்ரா ஓட்டம் எடுக்காமலும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

இறுதியில் இந்திய அணி தனது முதல் இன்னிங்ஸில் 156 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் பறிகொடுத்தது. இந்தியா தரப்பில் அதிகபட்சமாக ஜடேஜா 38 ஓட்டங்கள் எடுத்தார். நியூசிலாந்து தரப்பில் அதிகபட்சமாக மிட்செல் சாண்ட்னர் 7 விக்கெட்கள் வீழ்த்தினார். இதையடுத்து 103 ஓட்டங்கள் முன்னிலையுடன் நியூசிலாந்து தனது 2ஆவது இன்னிங்ஸை விளையாட ஆரம்பித்தது. அந்த அணி 174 ஓட்டங்களுக்கு நான்கு விக்கெட்களை இழந்து விளையாடி வருகிறது. மொத்தமாக 277 ஓட்டங்களை இதுவரை நியூசிலாந்து அணி பெற்றுள்ளது. (எ)



# வியன்னா ஓபன் ரென்னிஸ் காலிறுதியில் அலெக்ஸ்

வியன்னா, ஒக். 26

வியன்னா ஓபன் ரென்னிஸ் தொடரில் அலெக்ஸ் டி மினார் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

வியன்னா ஓபன் ரென்னிஸ் தொடர் ஆஸ்திரியாவில் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் ஆட்டம் ஒன்றில் அவுஸ்திரேலியாவின் அலெக்ஸ் டி மினார், இத்தாலியின் பிளேவியோ கோபோலி உடன் மோதினார்.

இந்தப் போட்டியில் ஆரம்பம் முதலே அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய டி மினார் முதல் செட்டை 7 - 6 (7 - 2) என்ற புள்ளிக்கணக்கில் கைப்பற்றினார். தொடர்ந்து நடைபெற்ற 2ஆவது செட்டில் 3 - 1 என்ற புள்ளிக்கணக்கில் டி மினார் முன்னிலையில் இருந்தார். அப்போது பிளேவியோ கோபோலி காயம் காரணமாக போட்டியில் இருந்து வெளியேறினார்.

இதன் காரணமாக அலெக்ஸ் டி மினார் காலிறுதிக்கு முன்னேறினார். (எ)



# ஜேர்மனியை வீழ்த்தியது இந்திய ஹொக்கி அணி

## சொந்த மண்ணில் தொடரை இழந்தது

புதுடில்லி, ஒக்.26

ஜேர்மனி அணிக்கு எதிரான 2ஆவது ஹொக்கி போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்றது.

புதுடில்லியில் நடைபெற்ற முதல் போட்டியில் ஜேர்மனி வெற்றி பெற்றது. இந்த நிலையில் இரண்டாவது போட்டியில் இந்தியா 5 - 3 என்ற கோல் கணக்கில் வென்றது. இந்திய அணிக்காக சுக்ஜீத் சிங் 2 கோல்களும், ஹர்மன் பிரீத் சிங் 2 கோல்களும், அபிஷேக் ஒரு கோலும் அடித்தனர். இதையடுத்து ஹொக்கி தொடர் 1 - 1 என்ற கணக்கில் சமனில் முடிந்தது. இதைத் தொடர்ந்து தொடரை வெல்லும் அணியை நிர்ணயிக்க ஷூட் - அவுட் முறை நடத்தப்பட்டது. இதில் ஜேர்மனி 3 - 1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று தொடரைக் கைப்பற்றியது. (எ)

# பங்களாதேஷ் அணி அறிவிப்பு

டாக்கா, ஒக். 26

தென்னாபிரிக்காவுக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டிக்கான பங்களாதேஷ் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி பங்களாதேஷுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதல் போட்டியில் தென்னாபிரிக்கா அபார வெற்றி பெற்றது. இதன் மூலம் 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 1 - 0 என தென்னாபிரிக்கா முன்னிலையில் உள்ளது.

இரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி வரும் 29ஆம் திகதி சட்டோகிராமில் தொடங்குகிறது. இந்தத் தொடர் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்புக்கு உட்பட்ட தொடர் என்பதால் இரு அணிகளும் வெற்றிக்காக கடுமையாக போராடும். இதனால் ஆட்டத்தில் பரபரப்புக்கு பஞ்சம் இருக்காது.

இந்த நிலையில், 2ஆவது டெஸ்ட் போட்டிக்கான பங்களாதேஷ் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. முதல் போட்டியில் இடம்பெற்ற தஸ்கின் அகமதுவுக்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ளது. மற்றபடி முதல் ஆட்டத்துக்கான அணியில் இடம் பிடித்த வீரர்கள் அப்படியே அணியில் இடம் பிடித்துள்ளனர். .

பங்களாதேஷ் அணி விவரம் நஜ்முல் ஹொசை ஷ ராண்டோ (தலைவர்), ஷத்மான் இஸ்லாம், மஹ்முதுல் ஹசன் ஜாய், ஜாகிர் ஹசன், மொமினுல் ஹக் ஷோராப், முஷ்பிகுர் ரஹீம், லிட்டன் தாஸ், ஜாக்கர் அலி அனிக், மெஹிதி ஹசன் மிராஸ், தைஜுல் இஸ்லாம், நயீம் ஹசன், ஹசன் மஹ்மூத், ஹசன் முராத், சையத் காலித் அகமது ஆகியோர் அணியில் இடம்பெற்றுள்ளனர். (எ)

# டேவிட் வோர்ணர் மீதான வாழ்நாள் தடை நீக்கம்

## ஆஸி கிரிக்கெட் சபை அறிவிப்பு

மெல்பேர்ன், ஒக். 26

டேவிட் வோர்ணர் மீது விதிக்கப்பட்ட வாழ்நாள் தடை நீக்கப்படுவதாக அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

வோர்ணர் அணித் தலைவராக செயல்பட விதிக்கப்பட்ட வாழ்நாள் தடையே இவ்வாறு நீக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரர் டேவிட் வோர்ணர். இவர் ஐ. பி. எல் போட்டிகளிலும் விளையாடி வருகிறார். இவர் சமீபத்தில் சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்ற நிலையில் தொடர்ந்து மற்ற லீக் போட்டிகளில் விளையாடி வருகிறார்.

இவர் கடந்த 2018ஆம் ஆண்டு தென்னாபிரிக்கவுக்கு எதிரான போட்டியில் பந்தை சேதப்படுத்திய குற்றத்துக்காக அவருக்கு, ஒரு வருடம் கிரிக்கெட் விளையாட தடை விதிக்கப்பட்டதோடு, எந்த அணிக்கும் தலைவராக விளையாட வாழ்நாள் தடையும் விதிக்கப்பட்டது.

இந்த நிலையில், தற்போது வோர்ணர் மீது விதிக்கப்பட்டிருந்த வாழ்நாள் தடை நீக்கப்படுவதாக அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. (எ)




# 4ஆம் இடம் பிடித்த தென்னாபிரிக்கா!

டுபாய், ஒக். 26

மிர்பூரில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில் பங்களாதேஷ் அணியை 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி தென்னாபிரிக்கா அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 1 - 0 என்று முன்னிலை பெற்றுள்ளது.

இத்தோடு ஐ. சி. சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் அட்டவணையில் நியூசிலாந்தை பின்னுக்குத் தள்ளி 4ஆம் இடத்தைப் பிடித்துள்ளது தென்னாபிரிக்கா. மிர்பூரில் நடந்த டெஸ்டில் வெற்றி பெறத் தேவையான 106 ஓட்டங்களைத் தென்னாபிரிக்கா 3 விக்கெட்களை இழந்து 22 ஓவர்களில் எடுத்து அபார வெற்றி பெற்றது.

நடப்புத் தொடரில் 2ஆவது டெஸ்ட் போட்டி சட்டோகிராமில் அடுத்த வாரம் செவ்வாயன்று நடைபெறுகிறது. இது முடிந்து தென்னாபிரிக்கா தங்கள் சொந்த மண்ணில் இலங்கையுடன் 2 டெஸ்ட் போட்டிகளிலும் பாகிஸ்தானுடன் 2 போட்டிகளிலும் ஆடுகிறது, இதில் வென்றால் நிச்சயம் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் பட்டியலில் மேலும் முன்னேறும்.

அதாவது இன்னும் இருக்கும் 5 டெஸ்ட் போட்டிகளில் 4 இல் வென்றால் தென்னாபிரிக்கா அணி உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிக்கு முன்னேறும் வாய்ப்புள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னாரில்...

பாதிக்கப்பட்டுள்ளனர்.

வெள்ளத்தால் இடம்பெயர்ந்தவர்கள் மூன்று இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். வெள்ளத் தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மன் னார் மாவட்ட செயலகம், அனர்த்த முகாமைத்துவ பிரிவு, பிரதேச செயல கங்கள் மற்றும் கிராம அலுவலர்கள் ஊடாக உணவு மற்றும் நிவாரணம் வழங்கப்பட்டு வருவதாகவும் அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள் ளது. (ஐ)

## யாழ்ப்பாணம்...

மேற்கண்டவாறு கூறினார்.

அரச சேவையை இலகுவாக்கவும் - வெளிப்படைத்தன்மை வாய்ந்ததாக உருவாக்கவும் டிஜிற்றல் மயமாவது அவசியம். நாட்டை டிஜிற்றல் மயமாக்கு வதற்கு அரசாங்கம் தெளிவான பார் வையை கொண்டுள்ளது. தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பத் துறையை மேம்படுத்துதல் மற்றும் டிஜிற்றல் பொருளாதாரத்தை உருவாக்கு தல் ஆகியவற்றின் அடிப்படையிலான கொள்கை நாட்டுக்கு தேவை. இதன்படி, யாழ்ப்பாணம், மாத்தறை மற்றும் கிழக்கு மாகாணங்களை மையமாகக் கொண்டு டிஜிற்றல் வலயங்களை உரு வாக்குவதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

சர்வதேச டிஜிற்றல் நிறுவனம் மற் றும் தேசிய தகவல் மற்றும் தொலைத் தொடர்பு தொழில்நுட்ப கண்டுபிடிப் பாளர்களுக்கிடையில் தொடர்புகளை ஏற்படுத்துவதும் அவசியமானது. தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில் நுட்ப கல்வியை கட்டியெழுப்புதல், அதற்கு தேவையான வசதிகளை வழங்கு தல், தொழில் துறையாளர்க ளுக்கு தேவையான கொடுப்பனவுகளை வழங் குவதும் முக்கியமானது. இதே போன்று டிஜிற்றல் பிரிவில் பெண்களின் பங்க ளிப்பை அதிகரிப்பதும் அவசியமாகும் - என்றும் அவர் கூறியிருந்தார். (ஐ)

## அறுகம் குடா...

கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களை விசாரணைக்கு உட்படுத்துவதற்காக பொலிஸார் தடுப்பு காவலில் வைக்க உத்தரவு பெற்றுள்ளனர்.

அவர்கள் அவ்வப்போது கைது செய்யப்பட்டனர். இந்தக் கைது மூலம் தான் இது தொடர்பாக மேலதிக பாது காப்பை ஏற்படுத்த வேண்டும் என்பது தெரியவந்தது.

அமெரிக்க தூதரகத்தின் அறிவிப் புக்கு முந்தைய நாள் இரவிலிருந்தே பொத்துவில் பொலிஸ் பகுதியில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந் தோம். பொலிஸ் விசேட அதிரடிப் படையினர், பொலிஸ், புலனாய்வு பிரி வினர், இராணுவம் மற்றும் கடற்படை யினர் கடல் பயணங்களில் ஈடுபடுத்தப் பட்டனர்.

அறுகம் குடாவுக்கு பயணம் செய்ய வேண்டாம் என்றோ அமெரிக்க தூதரகம் அறிவித்துள்ளதே தவிர, இலங்கைக்கு செல்ல வேண்டாம் என்று எச்சரிக்கை விடப்படவில்லை.

இலங்கைமீதான தாக்குதலின் தன் மையின்படி, மத்திய கிழக்கு பிராந்தி யத்தில் நிலவும் போர் நிலைமையால் இஸ்ரேலியர்கள் இலங்கையில் மட்டு மல்ல எங்கும் ஆபத்தானவர்களாக மாறக்கூடும் என்பதை இதுவரை நாம் அவதானிக்கவில்லை. வேறு நாட்டில் ஒரு வெளிநாட்டவரை குறிவைப்பது அல்லது இலங்கையர்களை குறிவைப் பது ஒரு நாசகார சம்பவம் அல்ல.

எவ்வாறாயினும், இந்தத் தாக்குதலின் தன்மை குறித்து எந்த உறுதிப்பாடும் இல்லை. ஆரம்பம் முதலே விசாரணை கள் நடத்தப்பட்டன. இதன் விளைவாக, மூன்று பேர் கடைசி நிமிடத்தில் கைது செய்யப்பட்டனர் - இவ்வாறு நிகழ்வு ஒன்றில் பங்கேற்றபோது பொலிஸ் பேச்சாளர் கூறினார். (ஐ)

## அரிசியை...

ஒரு கிலோ நாட்டு அரிசியை 218 ரூபாய்க்கு சந்தையில் விற்பனை செய்வ தற்கு இணங்கியிருந்தனர். எனவே, கட்டுப்பாட்டு விலையை மீறி ஒரு கிலோ நாட்டு அரிசியை 220 ரூபாய்க்கு மேல் விற்பனை செய்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று வர்த்தக அமைச்சு எச்சரித்துள்ளது. (ஐ)

## பாதுகாப்பு...

அதிகரிக்கப்பட்டுள்ளன. ரஜமகா விகாரை, தம்புள்ளை உயவத்தை ரஜமகா விகாரை மற்றும் சுற்றுலாத்தளங்கள், உண வகங்கள் மற்றும் முக்கிய இடங்களில் பாதுகாப்பு நடவடிக்கை அதிகரிக்கப் பட்டுள்ளது. இதேபோன்று, கொழும்பு, வெலிகம, எல்ல பகுதிகள் உள்ளிட்ட பகு திகளிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இதேசமயம், மட்டக்களப்பு நீதி மன்ற வளாகத்துக்கு விடுக்கப்பட்ட தாக் குதல் அச்சுறுத்தலால் அங்கும் பாது காப்பு நடவடிக்கைகள் பலப் படுத்தப் பட்டுள்ளன. நீதிமன்ற வளாகத்தின்மீது நேற்று அல்லது நேற்றுமுன்தினம் அல்லது நாளை மறுதினம் 28ஆம் திகதி தாக்குதல் நடத்தப்படும் என்று கடிதங் கள் மூலம் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. இதையடுத்து, மட் டக்களப்பில் பாது காப்பு பலப்படுத் தப்பட்டுள்ளது. அத்து டன், இந்த எச்சரிக்கை தொடர்பில் விசாரிக்க இரு பொலிஸ் குழுக்கள் அமைக்கப்பட்டுள் ளன.

இந்தியாவின் விஸ்தாரா விமானத் துக்கு விடுக்கப்பட்ட வெடிகுண்டு மிரட்டல் காரணமாக கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டது. நேற் றைய தினம் அவசர நிலை மீளப் பெறப் பட்டபோதிலும் விமான நிலை யத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப் பட்டிருந்தன.

இதேநேரம், நாடு முழுவதும் - குறிப் பாக சுற்றுலா தளங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முகமாக பொலிஸா ரும் விசேட அதிரடிப் படையினரும் கள மிறக்கப்பட்டு பாதுகாப்பு நடவடிக் கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. (ஐ)

## 12நாட்களில்...

உலக பார்வை தினத்தை ஒட்டி கடந்த 14ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரையான 12 தினங்களில் மட்டும் இந்த கண் புரை சத்திர சிகிச்சைகள் மேற் கொள்ளப்பட்டன. இந்த நாட்களில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனையில் பதிவு செய்யப்பட்ட 136 பேருக்கும் வவுனியா பொது மருத்துவ மனை மூலம் பதிவு செய்யப்பட்ட ஆயிரத்து 431 பேருக்கும் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் பதிவு செய்த 300 பேருக்கும் மன்னார் பொது மருத் துவமனையில் பதிவு செய்த 108 பேருக் கும் முல்லைத்தீவு பொது மருத்துவ மனையில் பதிவு செய்த 83 பேருக்கும் கண் புரை சத்திர சிகிச்சை யாழ். போதனா மருத்துவமனையில் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

இதனிடையே, கடந்த ஜனவரி மாதம் முதல் நேற்று வரையான காலத்தில் 14 ஆயிரத்து 685 பேர் கண்புரை சத்திர சிகிச்சை உடபடுத்தப்பட்டுள்ளனர். இதன் மூலம் அதிகளவு கண்புரை சத்திர சிகிச்சைகளை நடத்தும் மையம் என்ற பெருமையை யாழ். போதனா மருத்துவ மனையை பெற்றுள்ளது.

மேலும், இந்த கண் புரை சத்திர சிகிச்சைகள் மூலம் வடக்கு மாகாணத் தில் கண்புரை சத்திர சிகிச்சைக்காக காத்திருப்பவர்களின் எண்ணிக்கை பூச்சியமாகியுள்ளது. அத்துடன், வடக் கில் கண்புரை சத்திர சிகிச்சைக்கான காத்திருப்பு காலம் 3 வருடங்களிலிருந்து ஒரு மாதமாக குறைக்கப்பட்டுள்ளது. மேலும், ஆரம்ப சுகாதார நிலையங்க ளில் நேற்று முதல் கண் பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் தெரி விக்கப்பட்டது. (ஐ)

# கணவனின் மறைவை தாங்காத மனைவி உயிர் மாய்க்க முயற்சி!

### வடமராட்சியில் சம்பவம்

வடமராட்சி, ஒக். 26

திருமணமான ஒரு வருடத்திலேயே கணவன் உயிரிழந்த நிலையில் அவரின் பிரிவைத் தாங்காத மனைவி தவறான முடிவெடுத்த நிலையில் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை - புலோலி தென் மேற்கு பகுதியை சேர்ந்த சிவனேஸ்வரன் சிறீராஜ் (வயது -26) என்ற இளம் குடும் பஸ்தர் அண்மையில் சுகயீனம் காரண மாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் உயிரிழந் தார்.

இந்நிலையில், கணவனின் பிரிவை தாங்கமுடியாமல் மனைவி தவறான முடி வெடுத்த நிலையில் உறவினர்களால் மீட் கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளார். (ஐ-05-02)

# மூன்றாவது மதிப்பாய்வை இலங்கை விரைவாக எட்டும்!

### ஐ. எம். எவ். நம்பிக்கை

புதுடில்லி, ஒக். 26

ஐ. எம். எவ்வின் மூன்றாவது மதிப் பாய்வை நோக்கி இலங்கை விரைவாக முன்னேறும் என்று சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ. எம். எவ்.) ஆசிய, பசுபிக் பிராந்திய பணிப்பாளர் கலாநிதி கிருஷ்ணா சிறீநிவாசன் தெரிவித்துள் ளார்.

கடன் மறுசீரமைப்பு வேலைத்திட் டத்தை நடைமுறைப்படுத்துவதில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தை இலங்கை அடைந்துள்ளது. விரைவில் வரவிருக்கும் இலங்கைக்கான விரிவாக் கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் மூன்றாவது தவணைக்கு மதிப்பாய்வை நோக்கி விரைவாக முன்னேறும் வகை யில் அதை நிலைநிறுத்தியுள்ளது என் றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

## சுவரொட்டி...

முன்னணியின் சுவரொட்டிகளை ஒட் டிய போதே இந்த அனர்த்தம் நிகழ்ந்தது.

சம்பவம் தொடர்பில் ஒட்டுசுட்டான் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ஐ)

## கர்ப்பப்பை...

அடையாளம் காணப்படுகின்றனர்.

எனவே, கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயை தடுப்பதற்காக 10 வயது பூர்த்தியடைந்த - தரம் 6இல் கல்வி கற்கும் சகல மாணவியருக்கும் எச். பி. வி. தடுப்பூசி செலுத்தும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

எச். பி. வி. என்ற இந்தத் தடுப்பூசி இரு தடவைகள் செலுத்தப்பட வேண் டும். முதல் தடுப்பூசி செலுத்தப்பட்டு 6 மாதங்கள் பூர்த்தியடைந்ததும் இரண் டாவது தடுப்பூசி செலுத்தப்பட வேண் டும்.

பாடசாலைகள் ஊடாக தடுப்பூசி பெறமுடியாத மாணவியர் தமது பகுதி யின் சுகாதார மருத்துவ அதிகாரி பணி மனைக்கு சென்று தடுப்பூசியை பெற்றுக் கொள்ள முடியும். எனவே, பெற்றோர்க ளும் மாணவிகளும் எந்தவித அச்சமு மின்றி இந்தத் தடுப்பூசியை பெற்றுக் கொள்ள வேண்டும் என்றுசுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. (ஐ)

## மழையால்...

முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப் பாளர் ரி. என். சூரியராஜா தெரி வித்துள்ளார்.

சங்கானை பிரதேச செயலர் பிரிவில் ஜே/157 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த நான்கு பேரும் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் ஜே/278 கிராம சேவகர் பிரிவில் இரண்டு குடும்பங் களைச் சேர்ந்த 8 பேரும் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் ஜே/410 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும் பத்தை சேர்ந்த 4 பேரும், ஜே/417 கிராம சேவகர் பிரிவில் 5 குடும்பங் களை சேர்ந்த 24 பேரும் ஜே/393 கிராம சேவகர் பிரிவில் 3 குடும்பங் களைச் சேர்ந்த 14 பேரும் ஜே/413 கிராம சேவகர் பிரிவில் 3 குடும்பங்களைச் சேர்ந்த 7 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார். (ஐ)

## தமிழரின்...

அநுரகுமார திஸநாயக்க தலைமையி லான புதிய அரசாங்கத்தின் போக்கு தொடர்பில் அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் சுஜந்திரகுமார் பொன்னம்பலத்திடம் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த அவர், இந்த அரசாங்கம் தேசிய மக்கள் சக்தியாக அடையாளப்படுத்தப்படினும், அரசியல் ரீதியான தீர்மானங்களை மேற்கொள்வ தற்கான சகல அதிகாரங்களும் மக்கள் விடுதலை முன்னணி வசமே இருக்கின் றன.

13ஆவது திருத்தச் சட்டம் மற்றும் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு குறித்து மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா வால் அண்மையில் வெளியிடப்பட்ட கருத்தை மேற்கோள்காட்டிய கஜேந்திர குமார், இவ்வாறானதொரு பின்னணி யில் இந்த அரசாங்கத்திடமிருந்து முன்னேற்றகரமான நகர்வுகளை எதிர் பார்க்கமுடியும் எனத் தாம் கருதவில்லை - என்றார்.

இதேபோன்று எதிர்வரும் பொதுத் தேர்தல் பற்றிய அமெரிக்கத் தூதுவரின் கேள்விக்குப் பதிலளிக்கையில், "ஏற்க னவே நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் தெற்கில் பதிவான மாற்றம் வரும் பொதுத் தேர்தலில் வட, கிழக்கு மாகாணங்களிலும் பதிவாகும். இருப்பி னும் அந்த மாற்றம் தேசிய மக்கள் சக்திக்கு சாதகமானதாக இருக்காது. மாறாக எமக்கு சாதகமாகவே அமையும்.

கடந்த காலங்கள் போலன்றி நாம் பாராளுமன்றத்துக்கு தெரிவானதிலி ருந்து சகல தமிழ்த் தேசியக் கட்சிகளும் தேசியம் என்ற கொள்கையையும் சமஷ்டி தீர்வையும் முன்னிறுத்தி செயல் பட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள் ளன. எனவே பொதுத்தேர்தலின் பின்னர் சமஷ்டி தீர்வையே சகலரும் வலியுறுத்தும் சாத்தியம் உருவாகும்.

இவ்வாறானதொரு சூழ்நிலை தோற்றம்பெறும் பட்சத்தில், அந்தக் கொள்கை மாற்றத்தை அமெரிக்கா அதன் கொள்கையில் உள்வாங்கவேண் டும். அதற்கு அவசியமான ஒத்துழைப் புக்களை வழங்கவேண்டும் - என்றார்.

இதனை ஏற்ற அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், எதிர்வரும் தேர்தலில் அரசியல் தீர்வு குறித்து தமிழ் மக்கள் தமது வாக்குகள் மூலம் வெளிப்படுத்தும் நிலைப்பாட்டுக்கு புறம்பாக நாம் ஒரு போதும் செயல்படமாட்டோம் என்று உறுதியளித்தார் - என்று கூறினார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# இலங்கை சுற்றுலாத்துறையை சீர்குலைக்க சதி நடக்கின்றதா?

### ஆராயக் கோருகிறார் டலஸ் அழகப்பெரும

கொழும்பு, ஒக். 26

**இலங்கையில் உள்ள சுற்றுலாப் பகுதிகளை இலக்கு வைத்து பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்படலாம் என்ற பிரசாரத்தின் மூலம் இலங்கையில் சுற்றுலாத்துறையை சீர்குலைக்க சதி நடக்கிறதா என்பது குறித்து ஆராயவேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.**



ஐக்கிய மக்கள் கூட்டணி தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வெளிநாட்டு புலனாய்வுச் சேவைகள் தமது தூதரகங்கள் மூலம் இலங்கையில் தாக்குதல் சம்பவம் தொடர்பாக எமக்கு எச்சரித்துள்ளன. இலங்கையில் சுற்றுலாத்துறையை மையமாகக் கொண்ட கிழக்கு பிராந்தியம், தென் பிராந்தியம், மேற்கு பிராந்தியம் மற்றும் சுற்றுலா புவியியல் பிரதேசங்களில் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக வெளிநாட்டு புலனாய்வுச் செய்திகள் தெரிவித்துள்ளன.

அமெரிக்கத் தூதரகம் மற்றும் ஏனைய தூதரகங்கள் இந்த அறிவிப்பை வெளியிட்டதையடுத்து, சம்பவம் தொடர்பில் ஏதேனும் தகவல் தெரிந்தால் பாதுகாப்புப் படையினருக்கு அறிவிக்குமாறு இலங்கை பாதுகாப்புப் படையினர் மக்களிடம் கோரிக்கை விடுத்தனர்.

மேலும், இந்த சம்பவம் தொடர்பான தகவல் ஏலவே பொலிஸாருக்கு கிடைத்துள்ளதாக பதில் பொலிஸ் மா அதிபர் குறிப்பிட்டார். இந்த அறிக்கைகளைப் பார்க்கும்போது, எங்களுக்கு நியாயமான சந்தேகங்கள் எழுகின்றன. நாட்டின் பாதுகாப்பு குறித்து அச்சமும் அவநம்பிக்கையும் ஏற்பட்டுள்ளன.

அமெரிக்க தூதரகத்துக்கு இந்த தகவல் வருவதற்கு முன்பே நமது நாட்டின் பாதுகாப்பு படையினரும், புலனாய்வுத்துறையினரும் இந்த விடயத்தை அறிந்திருந்தால், இந்த எச்சரிக்கையை ஏன் பகிரங்கப் படுத்தவில்லை என்ற கேள்வி எழுகிறது. உயிர்த்த ஞாயிறு தாக்குதலிலும் இதேதான் நடந்தது.

நாட்டின் தேசிய பாதுகாப்பு தொடர்பில் தற்போதைய அரசாங்கம் அதிக அக்கறை காட்ட வேண்டும். நாட்டின் குடிமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதுடன், இலங்கையின் சுற்றுலாத்துறையை அழிக்கும் சதி இந்த சம்பவத்தின் பின்னணியில் இருக்கிறதா என்பதை உறுதி செய்து, இது குறித்து அரசாங்கம் பொறுப்புடன் மக்களுக்கு அறிவிக்கவேண்டும்.

எமது நாட்டில் மூன்று தேர்தல்களில் முக்கிய ஏலப் பொருளாக உயிர்த்த ஞாயிறு தாக்குதலே விற்கப்பட்டது. இப்போது நான்காவது தேர்தல் நடந்து வருகிறது. நான்காவது தேர்தலிலும் இத்தாக்குதல் சில்லறைப் பொருளாக விற்கப் படுகிறதா என்ற கேள்வி எழுந்துள்ளது.

எவ்வாறாயினும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தை தேர்தல் ஏலப் பொருளாக மாற்றாமல் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்குமாறு தற்போதைய ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவிடம் ஐக்கிய மக்கள் கூட்டணியாக கோரிக்கை விடுக்கிறோம் - என்றார். (அ)

# ஆட்சிமாற்றத்தின் பின்னரும் தொடரும் அடக்குமுறைகள்!

### கஜேந்திரகுமார் ஆதங்கம்

யாழ்ப்பாணம், ஒக். 26

ஆட்சி மாற்றம் நடைபெற்றதற்கு பிற்பாடும் எந்தவிதமான மாற்றமும் வடக்கு - கிழக்கில் இடம்பெறவில்லை என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முதன்மை வேட்பாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

தேர்தல் விதிமுறைகளை மீறி துண்டுப்பிரசுரம் விநியோகித்த குற்றச்சாட்டின் பேரில் நேற்று முன் தினம் மாலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்ட அவர், இது குறித்து கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எத்தனையோ வேட்பாளர்கள் தமது முகப்புத்தகத்தில் சட்டவிரோதமான முறையிலே பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள்.

ஆனால், என்னுடைய கையில் எந்தவிதமான துண்டுப்பிரசுரங்களும் இல்லாது நின்றுகொண்டிருந்த வேளையில் எமது அரசியல் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்தமை கண்டிக்கத்தக்கது.

இந்நிலையில், யார் யாரை திட்டமிட்டு இந்த ஆட்சியாளர்கள் குறிவைக்கிறார்கள் என்ற விடயத்தை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் - என்றார். (அ)

# ரஞ்சனின் வேட்புமனுவை நிராகரிக்கக் கோரி மனு!

கொழும்பு, ஒக். 26

எதிர்வரும் பொதுத் தேர்தலில் கம்பஹா மாவட்டத்தில் போட்டியிடும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் வேட்புமனுவை நிராகரித்து உத்தரவு பிறப்பிக்குமாறு உயர் நீதிமன்றில் மனுவொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ரஞ்சன் ராமநாயக்கவுக்கு பாராளுமன்றத்துக்கு செல்ல மற்றும் வாக்களிக்க உரிமை இல்லை என உத்தரவிடுமாறு குறித்த மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கம்பஹா மாவட்ட சுயேச்சைக் குழு வேட்பாளர் கே.எம். மஹிந்த சேனாநாயக்கவினால் இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் அதன் உறுப்பினர்கள், கம்பஹா மாவட்ட தேர்தல் அதிகாரி, ரஞ்சன் ராமநாயக்க உள்ளிட்டோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர். (அ)

# நீரிழிவு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு!

கொழும்பு, ஒக். 26

இலங்கையில் நீரிழிவு நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

40 வயதைக் கடந்த நான்கு பேரில் ஒருவர் நீரிழிவு நோயினால் பாதிப்புக்குள்ளாவதாக இலங்கை மருத்துவர் சங்கத்தின் உறுப்பினர் பேராசிரியர் வைத்தியர் மந்திக்க விஜேரட்ன தெரிவித்துள்ளார்.

அண்மையில் முன்னெடுக்கப்பட்ட புதிய ஆய்வுகளின் மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதனடிப்படையில், கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் அதிகமான நீரிழிவு நோயாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த மாவட்டங்களில் சுமார் 40 வயதுக்குட் பட்டவர்களுக்கு நீரிழிவு நோய் ஏற்பட்டுள்ளதாகவும் அதில் 33 வீதமானவர்கள் கடுமையாகப் பாதிப்புக் குள்ளாகியுள்ளதாகவும் அவர் கூறினார். நீரிழிவால் பாதிக்கப்பட்டவர்கள் இதயம் தொடர்பான நோய்கள், கை, கால் நரம்புத் தளர்ச்சி, கண்பார்வையில் குறைபாடு போன்ற பிரச்னைகளுக்கு முகங் கொடுத்துள்ளனர்.

இதனால் பாதிப்புகள் அதிகமாகி சிறுநீரகங்களும் செயலிழக்கும் அபாயம் காணப்படுகின்றது.

நீரிழிவுக்கான அறிகுறிகள் இருப்பின் உடனடியாக வைத்தியரிடம் சென்று பரிசோதனை செய்து கொள்ளும்படியும், உணவுப் பழக்கவழக்கங்களில் அதிக கவனம் செலுத்தவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாகவும் இலங்கை மருத்துவர் சங்கத்தின் உறுப்பினர் வைத்தியர் மந்திக்க விஜேரட்ன தெரிவித்தார். (அ)

# கல்விக்கு குறைவாகச் செலவழிக்கும் நாடுகளில் இலங்கை மூன்றாவது இடம்

கொழும்பு, ஒக். 26

கல்விக்காக குறைந்தளவு தொகையை செலவழிக்கும் நாடுகளின் பட்டியலில் உலகளாவிய ரீதியில் இலங்கை மூன்றாவது இடத்தில் காணப்படுவதாக பப்ளிக் பைனாணஸ் இணையத்தளம் வெளிப்படுத்தியுள்ளது.

ஹய்டி மாநிலம் மற்றும் லாவோஸ் இலங்கையை விட குறைவாக கல்விக்கு செலவழிப்பதாகவும், இந்தப் பட்டியலில் முதலாவது மற்றும் இரண்டாவது இடங்களில் அவ்விரண்டு நாடுகளும் காணப்படுகின்றன.

கல்விக்காக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பெரும்பாலான பகுதியை செலவழித்த அபிவிருத்தி குன்றிய நாடுகளாக சியாரா லியோன், மாலி, உகண்டா ஆகிய நாடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

எனினும், இலங்கை கல்விக்காக மொத்த உள்நாட்டு உற்பத்தியிலிருந்து 1.5 வீதத்தை மாத்திரமே எனவும் இதனால் இது மூன்றாவது இடத்தில் உள்ளதாகவும் இணையத்தளம் குறிப்பிடுகின்றது.

கல்விக்காக செலவழிப்பது பொருளாதார அபிவிருத்திக்கு மிக முக்கியமானதாக பார்க்கப்படுவதுடன் கல்விக்கு செலவழிக்காமல் பொருளாதார வளர்ச்சியை எதிர்பார்க்க முடியாது எனவும் இணையத்தளம் சுட்டிக் காட்டியுள்ளது. (அ)

# பாராளுமன்ற தேர்தல் குறித்து இதுவரை 662 முறைப்பாடுகள்

கொழும்பு, ஒக். 26

பொதுத்தேர்தல் தொடர்பில் இதுவரை 662 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவினால் நேற்று வெளியிடப்பட்டுள்ள முறைப்பாடுகள் குறித்த அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுத்தேர்தல் குறித்த முறைப்பாடுகளில் நேற்று முன் தினம் பிற்பகல் 4.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களுக்குள் 61 சட்ட மீறல்கள் குறித்த முறைப்பாடுகளும் ஒரு வன்முறைச் சம்பவமும் பதிவாகியுள்ளது.

இதனிடையே கடந்த மாதம் 19ஆம் திகதியிலிருந்து நேற்று முன் தினம் மாலை வரை 662 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

அந்தவகையில் 05 வன்முறைச் சம்பவங்கள் குறித்த முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. இருப்பினும் அதிகளவில் சட்டமீறல் குறித்த முறைப்பாடுகளே பதிவாகியுள்ளன. அந்தவகையில் இதுவரை தேசிய தேர்தல் முறைப்பாட்டு மையத்திற்கு மாத்திரம் சட்டமீறல்கள் குறித்த 642 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அத்துடன், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 427 சட்டமீறல்கள் குறித்தமுறைப்பாடுகள் இது வரை கிடைக்கப்பெற்றுள்ளன. அதேவேளை, ஐந்து வன்முறைச் சம்பவங்கள் குறித்த முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. கிடைக்கப்பெற்ற 662 முறைப்பாடுகளில் 522 முறைப்பாடுகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. அதேவேளை 140 முறைப்பாடுகள் குறித்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது

# நற்பெயரைக் கெடுக்காமல் என்னை கொன்று விடுங்கள்!

### கோரிக்கையை முன்வைக்கும் ரோஹித

கொழும்பு, ஒக். 26

தனது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்துவதை விட தம்மை கொலை செய்வதே மேல் என பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

அரசியல் கூட்டமொன்றில் உரையாற்றிய ரோஹித அபேகுணவர்த்தன, சேறு பூசும் பிரசாரங்கள் மூலம் தம்மை வீழ்த்துவது எளிதல்ல என்று குறிப்பிட்டார்.

எனவே தம்மை வெறுப்பவர்கள், சேறு பூசி தமது நற்பெயரைக் கெடுக்காமல், பல தலைவர்களை சுட்டுக் கொன்றதைப்போன்று தமது வாழ்க்கையையும் அழித்துவிடவேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

தேசத்திற்காகவும் அரசியலுக்காகவும் தனது உயிரை தியாகம் செய்ய தயார் என்றும் ரோஹித அபேகுணவர்தன கூறினார்.

இது சேறு பூசுவதை விட சிறந்தது என்று குறிப்பிட்ட அவர், தமது குணத்தை அழிப்பதை விட தன்னைக் கொல்வதே மேல் என்றும் வலியுறுத்தினார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.10.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org